Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 வைகாசி– 01 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ற–ஆகிர் 06 (15.05.2005) ஞாயிற்றுக்கிழமை இதழ்:228

இப்போது நாம் யாழ் நகரிலும்

10-15 நிமிடங்களில்....
பாஸ்போட்,
அடையாள அட்டை படங்கள் மற்றும்
Album Binding
Photo Creations
Duro Laminating
Photo Graphing
Digital Video



MOORTHY STUDIO AND DIGITAL COLOUR LAB
62/16 STANLEY ROAD, JAFFNA. T.P 021-222 2884 JAFFNA ROAD, MANIPAY.

# அரசாங்க - படைத்தரப்புப் போக்குகள் மாறாவிடின் நிலைமை மோசமடையும்!

## அகாஷியிடம் தமிழ்ச்செல்வன் எடுத்துரைப்பு



(கிளிநொச்சி)

தமிழ்மக்கள் மீது படைத்தரப்பு யுத்தத்தைத் திணித்து - யுத்த நெருக்கடி நிலைக்குத் தள்ளி, பழையபடி நிலைமையை மோசமாக்கும் வகையில் அரசு செயற்பட்டு வருகிறது.

இந்த விடயத்தில் இலங்கைக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதுடன், அரசும் படைத்தரப்பும் தங்களது போக்கை மாற்றிக் கொள்ளாதுவிடின் நிலைமை மோசமடையும் என்று விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் - ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷியிடம் தெரிவித்தார்.

நேற்றுக்காலை 10 மணியளவில் விமானப்படை ஹெலிகொப்டர் மூலம் கிளிநொச்சியை வந்தடைந்த யசூஷி அகாஷியை அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் வரவேற்றனர்.

பின்னர் 10.30 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை சந்திப்பு இடம்பெற்றது. விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் அகாஷியுடன் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பாக சு.ப.தமிழ்ச்செல்வன் செய்தியாளர்களிடம் பேசும்போது -

ஜப்பானிய சிறப்புத் தூதுவருக்கு எமது நிலைப்பாட்டை விளக்கியுள்ளோம். குறிப்பாக உதவி வழங்கும் நாடுகளில் மிக முக்கிய நாடாக ஜப்பான்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## செங்கலடிச் சந்தியில் இளைஞர் சுட்டுக்கொலை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - செங்கலடிச் சந்தியில் நேற்றுக்காலை இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

செங்கலடிச் சந்தியிலுள்ள கடைக்குச் சென்றுவிட்டு திரும்பிக்கொண்டிருந்தவரைக் குறிவைத்தே இந்தத் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதோர் துப்பாக்கிப்பிரயோகத்தை நடத்திவிட்டுத் தப்பிச்சென்றனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தகவல் கொடுப்பவர் துப்பாக்கிச் சூட்டில் காயம்!

(கொழும்பு)

மட்டக்களப்பைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் நீர்கொழும்பில் வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்து சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஒந்தாச்சிமடத்தைச் சேர்ந்த எஸ். ரவிச்சந்திரன் என்ற இளைஞரே நீர்கொழும்பில் வைத்து சுடப்பட்டார்.

நகைக்கடையொன்றில் பணியாற்றிவந்த இவர், இராணுவத்தின

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்பு ஏற்படாவிடின் மாற்று நடவடிக்கை எடுக்கப்படும்!

## பொதுக்கட்டமைப்புக்கு எதிராக கண்டியில் சத்தியாக்கிரகம்!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் இணைந்து அரசாங்கம் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கண்டி தலதா மாளிகைக்கு முன்பாக நாளை சத்தியாக்கிரகம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

தேசிய பிக்குகள் முன்னணியின் ஏற்பாட்டில் இந்தச் சத்தியாக்கிரகம் இடம்பெறவுள்ளது.

கண்டியில் நாளை ஆரம்பமாகவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் பேரால் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு அரசு தயாராகிவருவதாக தேசிய பிக்குகள் முன்னணி யின் தலைவர் கபில அமிலதேரர் குற் றஞ் சாட்டியுள்ளார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு யசூஷி அகாஷி எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை அரசியல் வரலாற்றில் மிக நெருக்கடியான இந்தக் காலகட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு சர்வதேச உதவிகள் சென்றடைவதற்கான பொதுக்கட்டமைப்பை அரசாங்கம் உருவாக்காவிடின் - உதவி வழங்கும் நாடுகள் மாற்று நட வடிக்கைகளை மேற்கொள்ளும் என்று ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி எச்சரித்துள்ளார்.

கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் செய்து புலிகளுடன் பேச்சு நடத்திய பின்னர் கொழும்பு திரும்பிய அகாஷி செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கைத் தீவகத்தில் அமைதி முயற்சிகள் வெற்றிபெற ஜப்பான் உள்ளிட்ட சர்வதேச சமூகம் உறுதுணையாக நிற்கும். இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிக நெருக்கடியான காலகட்டம் இது. போரும் இல்லாமல் உண்மையான அமைதிப்பேச்சுக்களுமற்ற சூழல் நிலவிவருகிறது. விரைவில் இந்நாட்டில் நிலையான வளமான சூழல் உருவாகும். (12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்டி மாநாட்டிலிருந்து பிரதமர் ஓரங்கட்டப்பட்டார்!

(கொழும்பு)

கண்டியில் நாளையும், நாளைமறுதினமும் நடை பெறவுள்ள உதவிவழங்கும் மாநாட்டின் நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஓரங்கட்டப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையிலிருந்து கிடைத்த ஆணையை அடுத்தே, உதவிவழங்கும் மாநாட்டின் அனைத்து நிகழ்வுகளிலிருந்தும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஓரங்கட்டப்பட்டதாகத் தெரிய வருகிறது.

வெளிநாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் உதவி வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கு பற்றும் இந்த மாநாட்டில் - பிரதமர் மஹிந்த ஓரங்கட்டப்பட்ட அதேவேளை, ஜனாதிபதியின் ஆலோசகர்களான மனோ தித்தவெல மற்றும் திலக் ரணவிராஜ ஆகிய இருவரும் இந்த மாநாட்டில் நேரடியாகப் பங்கு பற்றவுள்ளனர். இவர்களைவிட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் மாநாட்டில் கலந்துகொள்வதுடன் அங்கு உரையாற்றவுமுள்ளனர்.

இந்த மாநாட்டில் பிரதமர் கலந்துகொள்ள ஜனாதிபதியால் அனுமதி வழங்கப்படாத நிலையில் - அமைச்சர்களான லக்ஷ்மன் கதிர்காமர், சரத் அமுனுகம, தினேஷ்குணவர்த்தன, நிமால் சிறிபாலடிசில்வா, பேராசிரியர் திஸ்ஸவிதாரண, அனுரா பண்டாரநாயக்க, மங்கள சமரவீர, சுனில் பிரேம் ஜயந்த, ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய மற்றும் சந்திரசேனவிஜயசிங்க (12 ஆம் பக்கம் பார்க்க)

## நலன்புரி முகாமில் குண்டுவீச்சு: உறங்கிக்கொண்டிருந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்றில் - சுனாமியால் பாதிக்கப்பட்டிருந்த மக்கள் தங்கியிருந்த நலன்புரிமுகாமில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

ஆலையடிவேம்பு - தர்மரத்தினம் வித்தியாலய நலன்புரி முகாமில் வசித்துவந்த ஒருவரே கொல்லப்பட்டவராவார்.

ஒரு பிள்ளையின் தந்தையான சுந்தரம் பிள்ளையான் (வயது 26) என்பவரே நேற்று அதிகாலை 12.10 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டார்.

உறங்கிக்கொண்டிருந்தபோது இனந்தெரியாதோரால் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல் காரணமாகவே இவர் கொல்லப்பட்டார்.

இவர் சந்திவெளியை சொந்த இடமாகவும் சின்னமுகத்துவாரத்தில் நான்கு ஆண்டுகளாக வசித்துவந்தவர் என்றும் விசாரணைகளின் போது தெரியவந்தது.

அக்கரைப்பற்று பொலிஸார் இது குறித்த விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிற்றூர்தி சேவைகள் நெடுங்குளம் சந்தி வரை

(யாழ்ப்பாணம்)

பயணிகளின் வேண்டுகோளுக் கமைய எதிர்வரும் திங்கள் முதல் யாழ். கொழும்புத்துறை சிற்றூர்திச் சேவை நெடுங்குளம் சந்தி வரையும் இடம்பெறும் என யாழ். மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையம் தெரிவித்துள்ளது.

சிற்றூர்திச் சேவை யாழ். நகரத்திலிருந்து நெடுங்குளம் சந்தி வரையும் நீடிக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இதற்கமைய மேற்படி சேவை யாழ். நகரத்திலிருந்து கொழும்புத்துறையூடாக நெடுங்குளம் வரையும் நீடிக்கப்பட்டுள்ளது டன் இதுவரை தெற்கு புன்னாலைக் கட்டுவன் வரை சேவையில் ஈடுபட்டு வந்த சிற்றூர்திகள் யாவும் வடக்கு புன்னாலைக்கட்டுவன்வரை சேவை நீடிக்கப்பட்டுள்ளது என சிற் றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையம் தெரிவித்துள்ளது.

## திருநெறிய தெய்வீக விழா

(யாழ்ப்பாணம்)

திருஞானசம்பந்த நாயனார் அற்புத உற்சவத்தை முன்னிட்டு நடத்தப்படும் திருநெறிய தெய்வீகவிழா இன்று பிற்பகல் 4.30 மணிக்கு நல்லை ஆதீன கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது. சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவர்களால் நடத்தப்படும் இன்றைய நிகழ்ச்சிக்கு செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் தலைமை தாங்குவார்.

## எழுத்தாக்கப் போட்டிகள் நாளை

(சுதுமலை)

யாழ். வலய மட்டத்திலான தமிழ்மொழித் தின எழுத்தாக்கப் போட்டிகள் நாளை 2 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தர பாடசலையில் இடம்பெறவுள்ளன.

கோட்ட மட்ட எழுத்தாக்கப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களில் தெரிவு செய்யப்பட்டவர்கள் உரிய நேரத்திற்கு வந்து போட்டியை நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். தங்கராசா கேட்டுள்ளார்.

(91)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்க சமூக விஞ்ஞானப் பகுதி - நடத்தும் கருத்தரங்குத் தொடரில் - புலம் பெயர்ந்த நாடுகளில் சமூக மீளுருவாக்கம் என்ற பொருளில் மொழியியற்றுறை முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பார்வதி கந்தசாமி உரையாற்றவுள் ளார்.

யாழ். பல்கலைக்கழக பொருளியற்றுறை மண்டபத்தில் நாளை பிற்பகல் 3 மணிக்கு இந்தக் கருத்தரங்கு இடம்பெறும்

# விபத்துக்களில் காயம்

### சங்கானையில்

சங்கானை பகுதியில் மோட்டார் சைக்கிளுடன் கன்ரர் வாகனம் நேற்று மதியம் 12.30 மணியளவில் விபத்துக்குள்ளான சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் உடுவில் பாடசாலை ஆசிரியரான காசிப்பிள்ளை சுப்பிரமணியம் (வயது 62) என்பவரே காயமடைந்தவராவார்.

இந்தச் சம்பவத்தில் விபத்துக்குள்ளான கன்ரர் வாகனம் சங்கானைப் பொலிஸாரால் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை நண்பர்களுடன் மரத்தில் ஏறி விளையாடிய சிறுவன் கீழே வீழ்ந்ததால் காயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொண்டமானாறைச் சேர்ந்த குலேந்திரன் மோகன்ராஜ் (வயது 10) என்ற சிறுவனே காயமடைந்தவராவார்.

### நாச்சிமார் கோவிலடியில்

யாழ். நாச்சிமார் கோவில் சந்திக்கு அண்மையாக இரண்டு மோட்டார்சைக்கிள்கள் விபத்துக் குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டனர். இந்தச் சம்பவம் நேற்று இரவு நடைபெற்றது. சம்பவத்தின் போது எஸ்.கயறூபன் (24) பி.தினேஸ் ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - நாச்சிமார் கோவில் சந்திக்கு அண்மையாக வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் இரண்டு எதிர் எதிரே மோதிக் கொண்டதிலேயே மேற்படி விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. காயமடைந்த இருவரும் போதனாவைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

### ஆவரங்காலில்

வேகமாக வந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் வேகக் கட்டுப் பாட்டை இழந்து எதிர் எதிரே மோதிக் கொண்டதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் ஆவரங்கால் சந்தியில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் சிறுப்பிட்டி தெற்கைச் சேர்ந்த மாணிக்கம் சின்னராசா (வயது 48) மற்றும் கைதடி வடக்கைச் சேர்ந்த வட்டு கிட்டிணன் (வயது 50) ஆகிய இருவருமே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் யாழ்ப்பாணத்திலிருந்து அச்சுவேலி நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் எதிர்எதிரே மோதிக் கொண்டதில் இந்த விபத்து ஏற்பட்டதாகவும், இரண்டு மோட்டார் சைக்கிள்களும் பலத்த சேதத்திற்குள்ளாகியிருப்பதாகத் தெரிய வருகிறது.


மனோகரா யாழ்ப்பாணம்

சரத்குமார், அறிமுகம் ரமேஷ், பூஜா, கலாபவன் மணி மற்றும் பலர் நடித்த

ஐதிரா



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்

ரஜினிகாந், நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடிப்பில்



சந்திரமுகி

50 ஆவது நாளை நோக்கி...

(C/3979)

காட்சி நேரம் :- (பு.நே.) 11.00, 3.00,7.00,

ராஜா யாழ்ப்பாணம்

தனுஷ், ஸ்ரீதேவி, கருணாஸ் நடித்த



தேவதையைக் கண்டேன்

பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

விரைவில் இந்தியா இலங்கையில் ஒரேதின வெளியீடு

அறிந்தும் அறியாமலும



# வடமாகாண அதிபர்கள் சங்கம் நடத்தும் துரித மீட்டல் செயலமர்வு

அனுசரணை வழங்குவோர்:-

யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை

யாழ்.மாவட்ட மாணவர் அமைப்பு

யாழ்.மத்திய கல்லூரி லியோ கழகம்

**16, 17, 18, 19, 20 மே - 2005**

யாழ்.மத்திய கல்லூரி - 17, 18, 19 மே 2005
- யாழ், வலிகாம, தீவக மாணவர்களுக்கு

நெல்லியடி மத்திய கல்லூரி - 17, 18, 19 மே 2005
- வடமராட்சி, தென்மராட்சி, மாணவர்களுக்கு

கிளிநொச்சி மத்திய கல்லூரி - 16, 20 மே 2005
- கிளிநொச்சி, முல்லைத்தீவு மாணவர்களுக்கு

## PROGRAMME TIME TABLE

8.00 am - 8.15 am : Registration
8.15 am - 8.30 am : Inauguration

| TIME | JAFFNA | | | NELLIADY | | |
|---|---|---|---|---|---|---|
| | 1st Day | 2nd Day | 2nd Day | 1st Day | 2nd Day | 2nd Day |
| 8.30 am - 10.30 am | phy - I | Che - I | Com.M/Bio - I | Com.M/Bio - I | Phy - I | Che - I |
| 10.30 am - 10.45 am | Tea | Tea | Tea | Tea | Tea | Tea |
| 10.45 am - 12.45 am | phy-II | Che-II | Com.M/Bio-II | Com.M/Bio-II | Phy-I | Che-II |
| 12.45 am - 1.30 am | Lunch | Lunch | Lunch | Lunch | Lunch | Lunch |
| 1.30 am - 3.00 am | phy-III | Che-III | Com.M/Bio-III | Com.M/Bio-III | Phy - I | Che - III |
| 3.00 am - 3.15 am | Téa | Tea | Tea | Tea | Tea | Tea |
| 3.15 am - 5.00 am | phy-IV | Che-IV | Com.M/Bio-IV | Com.M/Bio-IV | Phy - I | Che-IV |

விரிவுரையாளர்கள்

இணைந்த கணிதம்: திரு.S.பிரேம்நாத், திரு.A.குணசிங்கம், இரசாயனவியல்: திரு.S.தில்லைநாதன், திரு.இராஜதேவா

பௌதிகவியல்: திரு.S.கணேசன், திரு.S.P.குணசீலன், உயிரியல்: திரு.V.குகாதரன், திரு.சு.ஈஸ்வரதாஸன்

ஊடக அனுசரணை:- நமது ஈழநாடு



# JOB ADVERTISEMENT

## SURVIVOR ASSISTANCE COORDINATOR (MINE ACTION)

In the framework of its partnership with Unicef, White Pigeon Technical Institute of Prosthesis - JAFFNA seeks a dynamic Survivor Assistance coordinator to be posted at the District Mine Action Office, Jaffna on full time basis.

**RESPONSIBILITIES:**

* Advising the GA, Mine action agencies and other relevant government offices and NGO on survivors' assistance principles and approaches.
* Together with all stakeholders prepare a district strategy for survivor assistance to be adopted by relevant forum.
* Establish strategic alliance with other agencies providing services to survivors or other people with disabilities to facilitate implementation of the identified interventions.
* Regularly conduct need assessment among survivors and their families (workshop, Home based assessment, etc) to ensure that assistance are in line with the actual needs of the beneficiaries.
* Ensure that survivors are aware of services, which are available.
* Advocate for the inclusion of survivors and other people with disability in all service provision.
* Ensure disabled children are able to attend school and after school activities such as children's club and sports activities.
* Provide training and monitor to UNICEF partners on survivors' assistance, including the planning, implementation of survivors assistance related projects, to ensure that activities are in line with UNICEF strategies.
* Undertake any other tasks assigned the supervisors.

**QUALIFICATIONS:**

- G.C.E (A/L) pass Preference will be given to Bachelor degree in Social Science.
- Relevant working experiences in related field.
- Advocacy, training and facilitation skills.
- Good planning and organization skills.
- Negotiating, comunication, networking skills.
- Computer skills.
- Excellent knowledge of English both oral and written
- Motorbike license

If you meet the required qualification and are interested in this post, Please send your detailed curriculum Vitae to

White Pigeon Technical Institute of Prosthesis,
63, palaly Road, Thirunelvely, Jaffna.
**Before 25th of may/2005.**

Only candidates under serious consideration will be contacted for interview.

வெண்புறா WHITE PIGEON

(C/4125)

# பொதுக்கட்டமைப்பை ஆதரிப்போருக்கு தேரபுத்த படை மரண அச்சுறுத்தல்

(கொழும்பு)

**பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு வழங்கும் தலைவர்களுக்கு தேரபுத்த பாய படை என்ற அமைப்பு கடுமையான தொனியில் மரண அச்சுறுத்தல் விடுத்துள்ளது.**

**தாய்நாட்டின் எதிரிகளுக்கான அறிவித்தல் எனும் தலைப்பில், அந்த அமைப்பின் தலைவர் மாயாதுனையின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில் -**

படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் தர்மரத்தினம் சிவராமின் கொலைக்கு உரிமை கோரப்பட்டிருந்ததுடன், சகல தேசத்துரோகிகளும் அவர்கள் தொடர்ந்த தேசத்துரோகத்தில் ஈடுபட்டால் தாய்நாட்டுக்கு உரமாகத் தயாராகவேண்டும்.

தேசிய இன விடுதலைப் போராட்டம் என்ற பெயரில் புலிகள் இந்த நாட்டைப் பிரிக்க முயற்சிக்கின்றனர். அமைதி முயற்சிகள் என்ற போர்வையில் தனித் தமிழீழத்தை நோக்கி ஒவ்வொரு படியையாகச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

அவர்களின் நோக்கத்தை நிறைவேற்ற நோர்வே வெள்ளைப் புலிகளும், ஐக்கிய தேசியக்கட்சி என்ற பச்சைப் புலிகளும் ஒன்று சேர்ந்துள்ளனர். இவர்களுடன் நீலப் புலிகளான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உள்ளவர்கள் ஆணும் பெண்ணுமற்றவர்களாக, ஆட்டு மந்தைகளாக உள்ளனர்.

துரோகிகள் அனைவரும் ஆய்வாளர்கள், புத்திஜீவிகள், கலைஞர்கள் என்ற போர்வையில் நடிக்கின்றனர். இந்தக் கொடும் பாவச் செயலை இயக்குபவர்களாக இவர்கள் உள்ளனர்.

தன்னை ஊடகவியலாளர் என்று அழைத்துக் கொண்டவர்தான், விடுதலைப்புலியாகிய தர்மரட்ணம் சிவராம். இவர்களைப் போல் ஒருவர் இருந்தாலே துரோகிகளுடன் இணைந்து சதித்திட்டம் தீட்டித் தாயகத்தை அழித்துவிடுவார்கள்.

தேசப்பற்றுள்ள மக்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான செய்தியாக நாங்கள் தெரிவிப்பது, இத்தகைய சக்தியை ஏப்ரல் 28 ஆம் திகதி இரவு 11.20 மணிக்கு நாங்கள் முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டோம்.

துரோகிகளைக் களைந்தெடுக்கும் நடவடிக்கை அது. சர்வதேசப் போர்வையில் நாட்டைச் சிதைத்துக் காட்டுகின்ற துரோகிகள் கூட்டம் ஊடகவியலாளர்கள் என்ற போர்வையில் இந்தப் பாவச் செயலை ஊக்குவித்து வருகின்றனர்.

ஏகாதிபத்தியவாதிகளான, துரோகிகளான விடுதலைப்புலிகள், பச்சை - வெள்ளை - நீலப் புலிகள் உள்ளிட்ட கொடிய துரோகிகள் அனைவரும் டொலர் பொதிகளுக்காக இணைந்துள்ளனர் என்பதை நாங்கள் அறிவோம். இரவும், பகலும் அவர்களை நாங்கள் கண்காணித்தே வருகிறோம்.

எமது தாயகத்துக்கு துரோகம் விளைவிக்கும் அனைவருக்கும் நாம் தெரிவித்து, இத்தகைய செயல்கள் மூலம் எமது மண்ணுக்கு நீங்கள் விரைவில் உரமாவது நிச்சயம் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

இந்தக் கடிதம் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் தலைமை நிர்வாகியான பாக்கியசோதி சரவணமுத்து, மியான யூனிட் என்ற அமைப்பின் தலைவர் மற்றும் இயக்குநர் சுனந்த தேசப்பிரிய, லியனல் குருகே, அசங்க வெலிகல அரசியல் யாப்பு விவகாரங்களுக்கான குழுவின் மூத்த ஆய்வாளர் உள்ளிட்டோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தேரபுத்தா பய என்பது பௌத்த பிக்குவின் பெயர். இவர் தமிழ் அரசர்களான சோழர்களுடனான யுத்தத்தில் துட்டகைமுனுவின் இராணுவத்தின் புகழ் பெற்ற 10 தளபதிகளில் ஒருவராக இருந்தவர். மாயாதுன்ன என்பவர் ஒரு சிங்கள அரசர்.

இந்தப் பெயரில் ஜே.வி.பியின் முந்தைய புத்த பிக்குகள் அமைப்பு செயற்பட்டது. அந்த அமைப்புத்தான் மீண்டும் செயல்படத் தொடங்கியிருப்பதாகக் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

# நாட்டை ரணிலிடம் ஒப்படைக்கும் யோசனை ஆளும் கட்சிக் கூட்டத்தில் முன்மொழிவு

நாட்டை எதிர்க்கட்சித் தலைவரிடம் ஒப்படைக்கும் யோசனை ஒன்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆலோசனைக் கூட்டம் ஒன்றில் முன்மொழியப்பட்டுள்ளது. பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜே.வி.பியை இணங்கவைக்கும் முயற்சி ஒன்று ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்றது. இதில் ஜே.வி.பியின் தலைவர்களும் ஜனாதிபதி தலைமையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட அமைச்சர்களும் பங்கேற்றனர்.

எனினும் அந்தப் பேச்சுவார்த்தையின்போது ஜே.வி.பியை இணங்க வைக்கும் முயற்சி தோற்றுப்போனது. இதனையடுத்து ஜே.வி.பியின் சந்திப்பு முடிவடைந்து வெளியேறிய பின்னர், ஜனாதிபதியின் தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் மாத்திரம் கலந்தாலோசனையில் ஈடுபட்டனர்.

இதன்போது பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜே.வி.பியை விலக்கி விட்டு, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவைப் பெறுவது குறித்து ஆராயப்பட்டது. எனினும் இதற்கு வலுவான ஆதரவு இருக்கவில்லை. இந்த நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ நாட்டை ரணிலிடம் ஒப்படைத்தால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணலாம் எனக் குறிப்பிட்டார்.

இதனையடுத்து ஏனையவர்கள் வியப்பை வெளியிட்டபோதும், ஜனாதிபதி எந்தவொரு வெளிப்பாட்டையும் காட்டவில்லை. இறுதியில் இது நல்ல யோசனை, ரணிலிடம் அரசாங்கத்தைப் பொறுப்பளித்துவிட்டு, அடுத்த நாள் நான் பதவி விலகிவிடுவேன் என அவர் கூறியதும் அனைவரும் தமது ஆட்சேபனையை வெளியிட்டனர். (01-தே)

# மின்சாரசபையை மறுசீரமைப்பது தொடர்பான புதிய யோசனை அடுத்த மாதம் தாக்கல்

(கொழும்பு)

மின்சாரசபையை மறுசீரமைப்பது தொடர்பான புதிய யோசனையை அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்குள் அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு மின்சாரசபையின் தொழிற்சங்கங்கள் இணங்கியுள்ளன.

அரசாங்கத்துடன் இணைந்து மின்சாரசபை தொழிற்சங்கங்கள் புதிய அறிக்கையைத் தயாரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளன.

இதற்கமைய மின்சாரசபையின் சகல தொழிற்சங்கங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், 3 தொழிற்சங்கத் தலைவர்கள்ளக் கொண்ட குழுவொன்றும், மின்சாரசபை நிர்வாகப் பிரிவு மற்றும் அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒரு குழுவும், சட்டமா அதிபர் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒரு குழுவுமாக மூன்று குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன.

தற்போது நியமிக்கப்படவுள்ள குழுக்களின் கருத்துகள், ஆலோசனைகளை ஏற்று, புதிய யோசனை தயாரிக்கப்படுவதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடியதாக இருக்கும் என தொழிற்சங்கங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

மின்சாரசபை தொழிற்சங்கப் பிரதிநிதி கள், அரசாங்கப் பிரதிநிதிகள், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச கூட்டுறவுக்கான ஜப்பான் வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கிடையே கடந்த வியாழக்கிழமை மின்சக்தி அமைச்சில் சந்திப்பொன்று நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போதே புதிய யோசனைகளை அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன் கையளிக்க இணக்கம் காணப்பட்டது. இதேவேளை மின்சார சபை மறுசீரமைப்பு மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பங்குகளை மூன்றாம் தரப்புக்கு வழங்கல் ஆகியன சம்பந்தமான அமைச்சரவை அறிக்கையை அரசு வாபஸ் பெற்றுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நட்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் உடனடியாக இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றப்படவேண்டும் என இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வ தேச கூட்டுறவுக்கான ஜப்பான் வங்கி என்பவற்றின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அரசாங்கம் எந்தவித மறுசீரமைப்புகளை மேற்கொள்ளவேண்டும் எனத் தாங்கள் எந்தவித யோசனைகளையும் முன்வைக்கவில்லை என்று தெரிவித்திருக்கும் நிதி வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள், ஆனால் அவ்வாறு செய்யும் கடமை அரசாங்கத்துக்கும், ஏனைய அதிகாரிகளுக்கும் இருப்பதாகச் சுட்டிக்காட்டியது. (01)

# யுத்தமும் சமாதானமும் அற்ற நிலை நீடிப்பது நல்லதல்ல!

## கருத்துக்கணிப்பு கூறுகிறது

(கொழும்பு)

நாட்டில் யுத்தமும் இல்லை சமாதானமும் இல்லை என்ற நிலை நீடிப்பது நல்லதல்ல என்று அண்மையில் நடத்தப்பட்டுள்ள கருத்துக் கணிப்பொன்றில் பெரும்பாலானோர் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கமும் - விடுதலைப்புலிகளும் இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண சமாதானப் பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமென்று 72 சதவீதத்துக்கும் அதிகமானோர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சிங்கள மக்களில் 63 சதவீதத்தினரும், தமிழ் மக்களில் 82 சதவீதத்தினரும், முஸ்லிம் மக்களில் 85 சதவீதத்தினரும் இந்த அபிப்பிராயத்தைத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மலையகத்தைச் சேர்ந்த தமிழர்களில் 77 சதவீதத்தினரும் இதே கருத்தைத் தெரிவித்திருக்கின்றனர்.

இந்தக் கருத்துக் கணிப்பு இந்த ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி வரை நடத்தப்பட்டது.

மாற்றுக் கொள்கைக்கான நிலையம் இந்தக் கருத்துக் கணிப்பை நடத்தியது.

பேச்சுவார்த்தைமூலம் சமாதான தீர்வுகாணப்படவேண்டுமென்று அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது என்று 53 சதவீதமானோரே கருத்து வெளியிட்டுள்ளனர்.

# வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணி ஜூனில்

(கொழும்பு)

இந்த வருட வாக்காளர் பெயர்ப் பட்டியலைக் தயாரிக்கும் நடவடிக்கை எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பமாகவுள்ளதாகத் தேர்தல் திணைக்களம் தெரி வித்துள்ளது.

கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக இந்தக் கணக்கெடுப்பு நிகழ்வதுடன், இந்தக் கணக்கெடுப்புக்கு அனைத்து, கிராம உத்தியோகத்தர்களையும் ஈடுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு பிரதேசங்கள் உட்பட நாட்டின் அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவு அடங்கலாக இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

இதற்கிடையில் சுனாமி அனர்த்தத்தால் காலி தேர்தல் அலுவலகத்திலிருந்த கடிதக் கோவைகள் முற்றிலுமாக அழிந்துவிட்டதனால், வாக்காளர் பட்டியல் உட்பட பெருமளவான ஆவணங்கள் சேதமடைந்துள்ள நிலையில், இதற்கு மாற்றீடாக பொது வேலைத்திட்டமொன்றை செயற்படுத்தவும் தேர்தல் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (தே)

# கண்டி மாநாட்டை முன்னிட்டு நகரின் பாதுகாப்பு அதிகரிப்பு!

(கொழும்பு)

கண்டியில் நாளை நடைபெற இருக்கும் மாநாட்டை முன்னிட்டு- கண்டி நகரின் பாதுகாப்புக்காக சுமார் ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கண்டி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட கூட்டத்தின்போது இவ்வாறு கண்டி பிரதேசத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி குணதிலக பண்டார கூறினார்.

பாதுகாப்புக் கடமைகளை முன்னிட்டு, வெளிமாவட்டங்களில் இருந்து பொலிஸார் அழைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். உதவி வழங்கும் மாநாடு நடைபெறவுள்ள நாளையும், நாளை மறுதினமும் கண்டி நகருக்கு உட்பட்ட எந்தவொரு வீதியிலும் வாகனங்கள் நிறுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் வீதிகள் போக்குவரத்துக்கு மூடப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பிட்ட இரண்டு தினங்களிலும் கண்டி நகரினூடாகப் போக்குவரத்து மேற்கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு சாரதிகளிடம் பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதேவேளை உதவி வழங்கும் மாநாட்டில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகள் தங்கும் ஹொட்டேல் களுக்குப் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (தே)

# கண்டி மாநாட்டில் பங்கேற்பதற்காக வெளிநாட்டு பிரதிநிதிகள் வரவுள்ளனர்

கண்டியில் நாளை ஆரம்பமாகவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் பங்கேற்பதற்காக சமாதான பிரதிநிதிகள் மற்றும் உதவி வழங்கும் நாடுகளின் உத்தியோகபூர்வ பிரதிநிதிகள் சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 200 இக்கும் அதிகமானோர் இலங்கைக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக வெளிநாட்டலுவல்கள் அமைச் சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நாட்டுக்கு உதவிகளை வழங்கும் உலக உதவி மாநாட்டில் பங்கேற்கும் நாடுகளின் பிரதிநிதிகள் 125 பேருக்கு மேலதிகமாக ஐரோப்பிய சங்கம், சர்வதேச நிதி நிறுவனம், ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜப்பான் அபிவிருத்தி நிதியம், உலக வங்கி மற்றும் சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

கண்டியில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்குப் பின்னர், சுனாமியால் அழிவுக்குள்ளான வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கும் விஜயம் செய்வதற்கும் இந்தக் குழு திட்டமிட்டிருப்பதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (தே)

# 35 ஆயிரம் சட்டவிரோத ஆயுதங்கள் நாட்டுக்குள் உலாவுகின்றனவாம்!

(கொழும்பு)

பலதரப்பட்ட அந்தஸ்த்துள்ள தனியார்களின் கரங்களில் 35 ஆயிரத்துக்கும் அதிகமான சட்டவிரோத ஆயுதங்கள் இருப்பதாக - மக்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் சமாதான விவகாரங்கள் தொடர்பான பற்றிய அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இவற்றுள் 1987 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலின்போது 5 ஆயிரத்துக்கும் அதிகமான வேட்பாளர்களின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டன.

பாதாள உலக செயற்பாடுகள், கொலைகள் மற்றும் பலவித குற்றச் செயல்கள் என்பன நாட்டில் அதிகரித்துச் செல்வதற்கு இந்த ஆயுத பாவனையே காரணமாக அமைவதால், இதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் சட்டவிரோத ஆயுதங்களைக் கட்டுப்படுத்தும் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த ஆணைக்குழுவின் தலைவராக திலக் ரணவிராஜ செயற்படுகிறார்.

ஜனாதிபதி சந்திரிகாவினதும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவினதும் ஆலோசனைகளுக்கு அமைய இவ்வாறான சட்டவிரோத ஆயுதங்களைத் தடை செய்து, மீண்டும் பொறுப்பேற்க அந்த ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளதுடன்,

இந்த நடவடிக்கைக்காக ஐக்கிய நாடுகள் அமைப்பின் மூலம் 2300 கோடி ரூபா பெறப்பட்டிருப்பதாகவும் அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (தே)

## பரிசளிப்பு விழாவும் நூல் வெளியீடும்

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும், நூற்றாண்டு மலர் வெளியீடும் நாளை பிற்பகல் 2 மணிக்கு கமலா குணராசா தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக முன்னாள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் றூபா சுப்பிரமணியமும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் கலந்து கொள்ளவுள்ளனர். (தே)

# மெதுவான பந்துவீச்சினால் தென்னாபிரிக்க கப்டன் சிமித்துக்கும் நான்கு போட்டிகளில் விளையாடத்தடை!



(லண்டன்)

பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் மெதுவாகப் பந்து வீசியதற்காக இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் கங்கூலிக்கு 6 போட்டிகளில் ஆடத்தடை விதிக்கப்பட்டது. தற்போது அவரைப்போல தென்னாபிரிக்க கப்டன் சிமித்திற்கும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளுக்குமிடையிலான 3ஆவது ஒருநாள் போட்டி கடந்த 11ஆம் திகதி பார்படோஸ் நகரில் நடைபெற்றது.

அப்போது 2ஆவதாக பந்துவீசிய தென்னாபிரிக்க அணி குறிப்பிட்ட நேரத்தைவிட கூடுதல் நேரம் எடுத்துக் கொண்டது. இது தொடர்பாக கப்டன் சிமித்திடம் போட்டி நடுவர் ஜெப்குரோவ் விசாரணை நடத்தினார்.

அப்போது போட்டியின் விதிமுறைகளை மீறி மெதுவாக பந்துவீசியிருப்பது தெரியவந்தது. ஏற்கனவே கடந்த செப்ரெம்பர் மாதம் இங்கிலாந்தில் நடைபெற்ற ஐ.சி.சி. சம்பியன் கிண்ண போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக மெதுவாகப் பந்து வீசியதால், கப்டன் சிமித்துக்கு எச்சரிக்கை விடப்பட்டது.

இந்தநிலையில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 2ஆவது ஒருநாள் போட்டியிலும் மெதுவாக பந்து வீசியதால் அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. தொடர்ந்து 2ஆவது முறையாக ஒரே அணிக்கு எதிராக அவர் மெதுவாக பந்துவீசியதால் நடத்தை விதி மீறல் - சி1 விதியின்படி நடவடிக்கை எடுக்க போட்டி நடுவர் ஜெப்குரோவ் சர்வதேச கிரிக்கெட் சபைக்கு சிபாரிசு செய்தார்.

இதை ஏற்று ஐ.சி.சி. தென்னாபிரிக்க கப்டன் சிமித் 4 ஒருநாள் போட்டிகளில் ஆடத்தடை விதிக்கப்பட்டது. இது தவிர போட்டி சம்பளத்தில் சிமித் 30 சதவீத தொகையை அபராதமாக வழங்கவேண்டும். அணியின் மற்ற வீரர்களுக்கு 15 சதவீத தொகை அபராதமாக விதிக்கப்பட்டது.

இதற்கிடையே 3ஆவது ஒருநாள் போட்டியில் பந்து வீசும்போது ஒழுங்கீனமாக நடந்துகொண்ட தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்கள் என்ரினி, லாங்வெட் ஆகியோரையும் போட்டி நடுவர் ஜெப்குரோவ் தனித்தனியாக அழைத்து விசாரணை செய்தார். அப்போது என்ரினி ஆட்டத்தின் 11ஆவது ஓவரில் ஒழுங்கீனமாக நடந்ததை ஒப்புக் கொண்டார்.

இதேபோல ஆட்டத்தின் கடைசி ஓவரின் 5ஆவது பந்தில் மேற்கிந்திய வீரர் கொலிமோரின் விக்கெட்டை வீழ்த்தியபோது ஒழுங்கீனமாக நடந்ததாக லாங்வெட்டும் ஒப்புக்கொண்டார். இதையடுத்து என்ரினிக்கு ஆட்ட சம்பளத்தில் 25 சதவீத அபராதமும், லாங்வெட்டுக்கு 20 சதவீத அபராதமும் விதிக்கப்பட்டது.

# கங்கூலிக்கு விதிக்கப்பட்டது அதிகபட்ச தண்டனையல்ல!

## ஐ.சி.சி. தலைவர் ஈஷான் மணி



(டுபாய்)

மெதுவாகப் பந்துவீசியதற்காக இந்திய அணித் தலைவர் கங்கூலிக்கு 6 ஒருநாள் போட்டிகளில் ஆடத் தடை விதிக்கப்பட்டமை - அதிகபட்சத் தண்டனையல்ல என்று ஐ.சி.சி. தலைவர் ஈஷான் மணி தெரிவித்துள்ளார்.

இதுபற்றி ஐ.சி.சி. தலைவர் ஈசான் மணி கருத்துத் தெரிவிக்கையில் -

ஒரு விதியை நாம் ஒருமுறை உருவாக்கினோம் என்றால் அதை கண்டிப்பாக மதித்து நடக்கவேண்டும். அப்போதுதான் அந்த விதி உருக் குலையாமல் இருக்கும்.

இந்த விதி யாரோ ஒருவருக்கு பிடிக்கவில்லை என்பதற்காக அதை மாற்றியமைக்க ஒவ்வொரு முறையும் முயற்சி செய்தால் அந்த விதி அர்த்தமில்லாததாகிவிடும்.

கங்கூலிக்கு தடைவிதிக்க பயன்படுத்திய விதிக்கு சர்வதேச கிரிக்கெட் சபையில் இடம்பெற்றுள்ள அனைத்து நாடுகளும் ஒப்புதல் அளித்திருக்கிறது. இது கடுமையாக இருக்கிறது என்றால் அப்போதே எதிர்ப்புத் தெரிவித்திருக்கலாம்.

இந்த விதிப்படி ஒரு வீரருக்கு குறைந்தபட்சம் 4 போட்டிகளிலும் அதிகபட்சம் 8 போட்டிகளிலும் ஆடத் தடை விதிக்கமுடியும். கங்கூலி இதில் நடுத்தரமான தண்டனையாக 6 ஆட்டங்களில் விளையாடத் தடை பெற்றிருக்கிறார்.

இப்போது கங்கூலிக்கு வழங்கப்பட்ட தண்டனை அதிகபட்சம் என்று விமர்சிக்கிறார்கள். அவருக்கு தடை விதித்தது போட்டி நடுவர்தான். எனவே அதுபற்றி நான் விமர்சனம் செய்ய முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

விளையாட்டு

# ரொனால்டோவின் திருமண நிச்சயதார்த்தம் முறிந்தது!




(சாவ்பாவ்லோ)

ரொனால்டோவுக்கும் காதலி டேனியலாவுக்கும் இடையிலான திருமண நிச்சயதார்த்தம் முறிந்தது. இதனால் டேனியலா கருவைக் கலைத்துவிட்டார்.

பிரேசில் நாட்டைச் சேர்ந்த உதைபந்தாட்ட வீரர் ரொனால்டோ 3 முறை உதைபந்தாட்டச் சங்கத்தின் சிறந்த விளையாட்டு வீரர் விருதைப் பெற்றிருக்கிறார்.

இவருக்கும் பிரேசில் நாட்டு பெண்கள் உதைபந்தாட்ட அணியின் வீராங்கனை மிலன் டோமிங்கசுக்கும் கடந்த 1999ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. அவர்களுக்கு ரொனால்ட் என்ற மகன் உள்ளான்.

இந்தநிலையில், எம்.ரி.வி. நடிகையும், முன்னாள் மொடல் அழகியுமான டேனியலா சிகாரிலாவுக்கும், ரொனால்டோவுக்கும் காதல் ஏற்பட்டது. கடந்த பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி காதலர் தினத்தன்று இருவருக்கும் நிச்சயதார்த்தம் நடைபெற்றது.

பாரிஸ் அருகே ஒரு அரண்மனையில் நடைபெற்ற இந்த விழாவில் 200 சிறப்பு விருந்தினர்கள் மட்டுமே கலந்துகொண்டனர். இதற்கு மட்டும் 10 கோடி ரூபா செலவானது.

இந்தநிலையில் ரொனால்டோ, காதலி டேனியலா திருமண நிச்சயதார்த்தம் முறிந்துவிட்டது. இருவரும் பிரிந்து வாழ்வதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. எதற்காக பிரிந்தார்கள் என்ற தகவல் தெரிவிக்கப்படவில்லை.

ஆனால் முதல் மனைவியிடமிருந்து முறைப்படி விவாகரத்துப்பெற ரொனால்டோ மறுத்துவிட்டதாகவும், அதனால் டேனியலா கோபமடைந்ததாகக் கூறப்படுகிறது. கடந்த 2 வாரங்களுக்கு முன்பு அவர் மருத்துவமனைக்குச் சென்று கருவைக் கலைத்தார். இதனால்தான் திருமண நிச்சயதார் த்தம் முறிந்துவிட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஐ.சி.சி. எலைட் பிரிவு நடுவர்களின் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டது!

(லண்டன்)

2005-06 ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி எமிரேட்ஸ் எலைட் பிரிவு நடுவர்கள் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை லண்டனில் வெளியிட்டுள்ளது.

எலைட் பிரிவில் இடம்பெற்றுள்ள நடுவர்கள் 2006 ஏப்ரல் முதல் திகதி வரை பணியாற்றுவர்.

பில்லி போடன், ஸ்ரீவ் பக்னர், அலீம் டார், டரெல் ஹெயர், டரெல் ஹார்ப்பர், ரூடி குயட்சன், டேவிட் ஷெப்பேர்ட், சைமன் டௌபல் ஆகியோர் அந்தப் பட்டியலில் இடம்பிடித்துள்ளனர்.

அந்தப் பட்டியலில் இடம்பெற்றிருந்த குண்டப்பா விஸ்வநாத்தின் ஒப்பந்த காலம் (3 ஆண்டுகள்) முடிவு பெறுவது மட்டுமே ஒரே மாற்றமென ஐ.சி.சி. தெரிவித்துள்ளது.

கிறிஸ் புரோட், ஜெஃப் குரோவ், அலன் ஹர்ஸ்ட், கிளைவ் லொயிட், ரஞ்சன் மடுகல்லே, றொஷான் மகாநாம, மைக் புரக்டர் ஆகியோரும் எலைட் பிரிவில் நீடிக்கின்றனர்.


எலைட் பிரிவிலுள்ள நடுவர்கள் 13 டெஸ்ட் மற்றும் 14 ஒருநாள் போட்டிகளில் பணியாற்றலாம்.

எமிரேட்ஸ் எலைட் பிரிவு நடுவர்களுக்கு உறுதுணையாக அந்தந்த கிரிக்கெட் சபைகளால் நியமனம் செய்யப்படும் எமிரேட்ஸ் சர்வதேச பிரிவு ஐ.சி.சி நடுவர்கள் பணியாற்றுவர். அவர்கள் 13 டெஸ்ட் போட்டிகள் மற்றும் 17 ஒருநாள் போட்டிகளில் பணியாற்றுவர்.

எமிரேட்ஸ் சர்வதேச பிரிவு நடுவர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்களின் விபரம் -

ஸ்ரீவ் டேவிஸ், பீட்டர் பார்க்கர், றொபேட் பாரி (அவுஸ்ரேலியா), அக்தர் உத்தின், மஹ்பூபர் ரஹ்மான், நாதிர் ஷா (பங்களாதேஷ்), ஜெரேமி லொயிட்ஸ், மார்க் பென்சன், நிஜெல் லாங் (இங்கிலாந்து), ஆரணி ஜெயப்பிரகாஷ், ஹரிஹரன் கிருஷ்ணா, இவாதுரி சிவராம் (இந்தியா), டக் கோவி, டோனி ஹில், இவான் வாட்கின் (நியூஸிலாந்து), ஆசாத் ராஃப், நதீம் காரி, ஜமீர் ஹைதர் (பாகிஸ்தான்), பிரைன் ஜெர்லிங், இயான் ஹோவல், கார்ல் ஹர்டர் (தென்னாபிரிக்கா), அசோக டி சில்வா, டிரோன் விஜேவர்த்தன, பீட்டர் மனுவல் (இலங்கை), எட்டி நிகோலஸ், பில்லி டாக்ட்ரோவ், பாசில் மோர்கான் (மேற்கிந்தியத் தீவுகள்), ரஷல் டிஃபின், கெவான் பார்பர், இயான் றொபின்சன் (சிம்பாப்வே).

# காலிறுதியில் ஷரபோவா



(ரோம்)

ரோமில் நடைபெற்றுவரும் ரோம் மாஸ்டர்ஸ் ரெனிஸ் போட்டியில் பிரான்ஸ் வீராங்கனை மேரி பியர்ஸுக்கு எதிராக வியாழக்கிழமை நடைபெற்ற 3ஆவது சுற்று ஆட்டத்தில் பந்தை வலுவுடன் திருப்புகிறார் ரஷ்யாவின் மரியா ஷரபோவா. 2 மணி நேரம் நடைபெற்ற போராட்டத்தில் ஷரபோவா 7-6 (7-4), 6-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.

# ஓய்வு பெறுகிறார் டேவிட் ஷெப்பேர்ட்!



(லண்டன்)

சர்வதேச கிரிக்கெட் நடுவர் பணியிலிருந்து ஓய்வு பெறுகிறார் இங்கிலாந்தைச் சேர்ந்த டேவிட் ஷெப்பேர்ட்.

நடுவர்களிலேயே மிகவும் பிரபலமானவர் ஷெப்பேர்ட். இதுவரை 165 ஒருநாள் போட்டிகளிலும், 92 டெஸ்ட் போட்டிகளிலும் பணியாற்றியுள்ளார். இது ஒரு உலக சாதனையும்கூட. இவ்வளவு அதிகமான போட்டிகளில் வேறு யாரும் பணியாற்றியதில்லை.

பாகிஸ்தான் - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையே ஜமேக்காவில் அடுத்த மாதம் நடைபெறும் 2ஆவது டெஸ்ட் போட்டி, அவர் பணியாற்றும் கடைசி டெஸ்ட் போட்டியாக அமையும்.

அதேசமயம், இங்கிலாந்து-அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையே ஜூலை 12ஆம் திகதி ஓவலில் நடைபெறும் போட்டியே, ஒருநாள் கிரிக்கெட்டில் அவர் பணியாற்றும் இறுதிப் போட்டியாக இருக்கும்.

வீரராகவும், நடுவராகவும் கிரிக்கெட் எனது வாழ்க்கையில் 40 ஆண்டுகள் இடம்பெற்றது. இனிமையான அந்தப் பணியிலிருந்து வெளியேறுவது நான் மேற்கொண்ட கடினமான முடிவுகளில் ஒன்றாகவே இருக்கும் எனத் தெரிவித்துள்ளார் ஷெப்பேர்ட்.

இந்தியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா ஆகிய இடங்களில் கடைசியாக நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளின் இறுதி ஆட்டத்தில் நடுவராகப் பணியாற்றிய பெருமை ஷெப்பேர்ட்டுக்கு உண்டு.

# மேசைப்பந்தாட்டத்தில் வெற்றி!

தேசிய விளையாட்டு விழாவை முன்னிட்டு வடக்கு-கிழக்கு மாகாண சபை கடந்த 7ஆம், 8ஆம் திகதிகளில் மன்னாரில் நடத்திய மாகாண மட்ட மேசைப் பந்தாட்டப் போட்டியில் - நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட ஆண்கள் பிரிவு மற்றும் பெண்கள் பிரிவு அணிகள் வெற்றிபெற்றன.

ஆண்கள் பிரிவு தொடர்ச்சியாக மூன்றாவது முறையும், பெண்கள் பிரிவு ஐந்தாவது முறையும் வெற்றி பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (63)





வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையுடன் வடமராட்சி தெற்குமேற்கு (கரவெட்டி) பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மகளிர் உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் பங்குபற்றிய அல்வாய் மனோகரா அணியை முதற்படத்திலும் வதிரி பொமேர்ஸ் அணியை இரண்டாவது படத்திலும் காணலாம். (13)

## புகழ்பெற்ற நாடகக்கலைஞர் காலமானார்



நாடகத்துறையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மேடைகள் கண்டு இலங்கை எங்கும் தன் புகழைப் பரப்பிய, சந்திரமதி இரத்தினம் என்று பலராலும் அழைக்கப்படும் க.இரத்தினம் காலமாகிவிட்டார்.

இவர் சந்திரமதியாகப் பெண் வேடம்போட்டு கொழும்பு, திருகோணமலை, கண்டி, மட்டக்களப்பு என இலங்கையின் பல திசைகளிலும் மேடையேறி, பலரது பாராட்டுகளையும் பெற்றுள்ள இரத்தினம் அரிச்சந்திர மயானகாண்டத்தைவிட ஏழுபிள்ளை நல்லதங்காள், பக்த நந்தனார், ஸ்ரீவள்ளி போன்ற நாடகங்களிலும் பெண் வேடமேற்று புகழ் பதித்த இவர், கடந்த 2002 ஆம் ஆண்டு கலாபூஷணம் விருதைப் பெற்றார்.

அத்துடன் நடிகமணி, சோக சோபித சொர்ணக் கவிக்குயில் போன்ற பட்டங்களைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (55)

## வரவேற்பு நிகழ்வு

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட புகுமுக மாணவர்களை வரவேற்கும் விருந்துபசார நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது. மாணவர் பொது அறையிலே நடைபெறவுள்ள இந்த வரவேற்பு நிகழ்விலே விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் குமாரவடிவேல் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (94)

# ஆத்திசூடியை மனனம் செய்த சிறுவர்கள் இன்று மன்மதராசா பாடுகிறார்கள்

## பரிசளிப்பு நிகழ்வில் கவிஞர் புதுவை

(யாழ்ப்பாணம்)

**ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்ற நல்வழிப் போதனைகள் எல்லாவற்றையும் நாம் கற்றுக் கொண்டதால் சமுதாயத்தில் இன்று நாம் மனிதர்களாகக் கணிக்கப்படுகிறோம். அன்றைய கல்வி சகல கலைகளையும் எமக்குப் போதித்தது. போதித்த கல்வியால் பயனைப் பெற்றோம் எனக் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.**

தொல்புரம் தமிழ்ப்பொழில் கழகம் நடத்திய ஆத்திசூடி மனனப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து பேசும் போது -

இன்று சினிமா மோகம், தொலைக்காட்சி மோகம் - இன்றைய சின்னஞ்சிறுசுகள் அன்றைய ஆத்திசூடியை மறந்துவிட்டார் கள். மன்மதராசா, மன்மதராசா எனப் பாடுகின்றனர். இந்தச் சூழ்நிலையை அவர்களுக்குப் பெற்றோராகிய நாமே ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். எமது மண்ணில் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத வீடு என்று ஒன்றும் இல்லை. 24 மணிநேரமும் அதனோடு மூழ்கியவர்களாக எமது சமுதாயம் காணப்படுகிறது. இதனைப் பார்த்து சின்னஞ்சிறுசுகளும் தம்மை மாற்றிக் கொள்ளத் தொடங்கிவிட்டனர். தலைகீழாக மாறிப்போகும் சமுதாயத்தைத் தெரிந்துகொண்டே நாம் உருவாக்குகின்றோம் என கவிஞர் புதுவை தெரிவித்தார்.

பாடசாலைகளில் செலவழிக்கும் நேரத்தைவிட, சின்னத்திரையில் செலவழிக்கும் நேரம் இவர்களுக்கு அதிகமாகவுள்ளது. பெரியோர்களும், பெற்றோர்களுமே அந்த நிலை யைப் பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கிறோம். இதன் விளைவை நாம் சந்திக்கும்போது நாங்கள் இருக்க மாட்டோம். பிள்ளைகள் இருப்பார்கள். அன்று அவர்களே அழவேண்டிய நிலை ஏற்படும். காலப்போக்கில் இந்தப் பிள்ளைகளின் நிலை என்ன? நாங்கள் தவறிவிட்டோம். பிள்ளைகளையும் தவறவிடுகின்றோம். விளைவு



பெரும் பாதிப்பைச் சமூகத்துக்கு ஏற்படுத்தப்போகிறது.

மேல்நாட்டில் பிள்ளைகளை வளர்க்கிறார்கள் ஒழுங்கான முறையில். இங்கு நாம் ஓர் ஒழுங்கு, கட்டுப்பாடு இல்லாத சமூகத்தைத் தெரிந்து கொண்டே உருவாக்குகிறோம்.

30 வருடங்களாக அழுதுகொண்டிருக்கும் எம் இனம், இன்றும் அழுது கொண்டிருக்கிறது. இந்தக் கண்ணீர் இன்னும் முற்றுப்பெறவில்லை. அற்புதமான வாழ்க்கையையும், அற்புதமான நாட்டையும் உருவாக்கி அடுத்த தலைமுறையாவது வாழட்டும்; இந்த நாட்டை ஆளட்டும் எனத் தெரிவித்தார்.

# வீதிக்கடவைகளின்மையால் போக்குவரத்துக்கு அபாயம்!

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதான வீதிகளில் பாடசாலைகள், வைத்தியசாலைகளுக்கு முன்பாகவுள்ள வீதிகடவைக் கோடுகள் அழிவடைந்து காணப்படுகின்றன.

பிரதான வீதிகளை கடற்ப்பதற்குப் பாடசாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் முக்கிய சந்திகளில் இடப்பட்டு வந்த வீதிக் கடவைக் கோடுகள் கவனிப்பாரற்று விடப்பட்டு, அழி வடைந்து காணப்படுவதால், பாத சாரிகள் குறிப்பாக மாணவர்கள், நோயாளர்கள் பிரதான வீதிகளைக் கடப்பதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். யாழ்.மாவட்டத்தில் என்றுமில்லா தவாறு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களின் போக்குவரத்து அதிகரித்துக் காணப்படுவதால் வீதிகளில் பாதசாரிகள் செல்லும் போதும், வீதியைக் கடக்க முற்படும் போதும் விபத்துக்களைச் சந்திக்க வேண்டி யேற்பட்டுள்ளது.

ஆகவே வீதிக்கடவைக் கோடுகளை சீர்செய்து, பொதுமக்களின் பாதுகாப்பான போக்குவரத்தை உறுதிப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் பொது மக்கள் கோரியுள்ளனர். (63)

# டெங்கு ஒழிப்பு வாரம் நாளை முதல் அனுஷ்டிப்பு

யாழ்.மாவட்டத்தில் நாளை தொடக்கம் எதிர்வரும் 22 ஆம் திகதி வரையான நாட்களை டெங்கு காய்ச்சல் தடுப்புப் பற்றிய விழிப்புணர்வு வாரமாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

இது குறித்த மாநாடொன்று கடந்த திங்கட்கிழமை யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த வாரத்தில் சுற்றுப்புறச் சூழலைத் துப்புரவாக வைத்திருத்தல், வீடுகளையும், சுற்றுப்புறங்களையும் துப்புரவு செய்தல் ஆகிய செயற்பாடுகளினூடாக நுளம்புகள் பரவாது தடுத்தல், சுகாதாரமான முறையில் உணவு தயாரிப்புக்காக உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுத்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுப்பது எனவும் இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் யாழ்.மாவட்டப் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன், உள்ளூராட்சித் திணைக்கள உத்தியோகத்தர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், கல்வித் திணைக்களப் பணிப்பாளர்கள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்த உத்தியோகத்தர்களுக்குப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும், சிரமதானமும் நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாளைமுதல் எதிர்வரும் 22 ஆம் திகதிவரை - கிராம உத்தியோகத்தர்களும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் தமது பகுதிகளில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும் நடத்தி, அது தொடர்பான அறிக்கையை அனுப்பிவைக்குமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் வ.ரூபினி பணித்துள்ளார்.

இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கு அந்தந்தப் பகுதியில் உள்ள விவசாய சம்மேளனங்கள், கமக்காரர் அமைப்புகள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், ஆலய பரிபாலன சபைகள் என்பன தமது பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. (44)

# சட்டமாணிக் கற்கைக்கு 13 மாணவர்கள் தெரிவு

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் சட்டமாணிக் கற்கைநெறிக்கு இந்த முறை யாழ்.மாவட்டத்திலிருந்து அதிகளவில் மாணவர்கள் தெரிவாகியுள்ளனர்.

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ள சட்டமாணிக் கற்கைக்கு இந்தமுறை 13 மாணவர்கள் தெரிவாகியுள்ளனர். கடந்த காலங்களில் மேற்படி கற்கை நெறிக்குத் தெரிவாகிய மாணவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க, இந்தமுறை இந்தத்தொகை உயர்வடைந்துள்ளதாகத் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலைய இயக்குநர் எந்திரி.ச.ஆ.ஞானேந்திரா தெரிவித்தார்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் நாடளாவிய ரீதியில் அது கொண்டுள்ள பிராந்திய நிலையங்களில் கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, மாத்தறை ஆகிய நான்கு நிலையங்களில் மட்டுமே சட்டமாணிக் கற்கை நெறிக்காக மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

யாழ்.பிராந்திய நிலையத்தில் இந்தக் கற்கை நெறிக்குத் தெரிவாகிய மாணவர்களின் பதிவுகள் கடந்த வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்டன.

# கண்டியில் நடைபெறவுள்ள மாநாட்டில் மகஜர்கள் கையளிக்க ஏற்பாடு

கண்டியில் நாளை மறுதினம் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்ளும் சர்வதேசப் பிரதிநிதிகளிடம் யாழ்ப்பாணத்தி லிருந்து நேரடியாகச் சென்று மகஜர்களைக் கையளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

தமிழர் தாயகப்பகுதிகளில் மீள் கட்டுமாணப்பணிகளை முன்னெடுக்க வசதியாக சர்வதேச சமூகம் நிதி உதவிகளை வழங்கவேண்டும் என்று கோரும் மகஜர்களே கையளிக்கப்படவுள்ளன.

மகஜர்களைக் கையளிப்பதற்காகப் பொது அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் நால்வர் கண்டிக்குச் செல்லவுள்ளதாகத் தெரியவருகிறது. (13)



நேற்று ஆரம்பமாகிய திருமறைக்கலாமன்ற ஓவியக்கலை வட்டத்தின் கடல் வரைந்த ஓவியம் கண்காட்சி நிகழ்விலிருந்து. படங்கள் - நியூட்டன்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## வருடாந்த மஹோற்சவம்

(வண்ணை)

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் பார்த்திப வருட மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 தினங்கள் இடம் பெறும் இந்த உற்சவத்தில் 22 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (111)

## வலயமட்ட தமிழ்த்தினப் போட்டி

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலயமட்டத் தமிழ்த்தினப் போட்டி எதிர்வரும் 22, 24 ஆம் திகதிகளில் வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையிலும், யாழ்.மத்திய கல்லூரியிலும் காலை 9 மணிதொடக்கம் நடைபெறவுள்ளது.

இந்த வலயமட்டப் போட்டியில் கோட்டமட்டத்தில் நடைபெற்ற தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்களை இதில் கலந்துகொள்ளுமாறு யாழ்.கல்வி வலயப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## ஆசிரிய ஓய்வூதியர் சங்கத்தின் பொதுக்கூட்டம்

வலிகாமம் கிழக்கு கோப்பாய் அரச ஆசிரிய ஓய்வூதியர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி - சண்முகநாதன் நினைவு மண்டபத்தில் த.மயில்வாகனம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறும், தத்தமது சுற்றாடலினுள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர்களையும் இந்தச் சங்கத்தில் அங்கத்தவர்களாக்க உதவுமாறு சங்கத்தின் உபசெயலாளர் சி.திருச்செல்வம் கேட்டுள்ளார்.

## மூத்த கலைஞர்கள் விபரங்கள் சேகரிப்பு

நல்லூர் பிரதேச கலாசாரப் பேரவையால் நடத்தப்படவுள்ள கலாசாரப் பெருவிழாவில் மூத்த கலைஞர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

எனவே, நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வயது முதிர்ந்த கலைச் சேவை ஆற்றிவரும் மூத்த கலைஞர்களது விபரங்களை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்பாக நல்லூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் ஒப்படைக்குமாறு பிரதேசசெயலர் அறிவித்துள்ளார். (63)

## கணினிக் கல்விநிலைய திறப்புவிழா

தாமோதரம்பிள்ளைவீதி, சங்கத்தானை சாவகச்சேரியில் அமைக்கப்பட்ட சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் இலவச கணனிக் கல்வி நிலைய திறப்புவிழா இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாணவர் பேரவைத் தலைவர் வி.விஜயரூபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தத் திறப்புவிழா நிகழ்வில்- யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் வ.கந்தசாமி பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் சந்திரசேகரமும், யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் யோ.கலைவிழியும், மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் சி.கிருஸ்ணாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## வலயமட்ட தமிழ்த்தின எழுத்தாக்கப் போட்டி

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தின எழுத்தாக்கப் போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையில் நடை பெறவுள்ளது.

இந்தப் போட்டியில், கோட்டமட்ட எழுத்தாக்கப் போட்டியில் 1, 2 ஆம் இடங்களைப் பெற்று வலயமட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்ட போட்டியாளர்கள் தமது பாடசாலை - இந்தத்துறைப் பொறுப்பாசிரியர்களுடன் வந்து போட்டியில் கலந்துகொள்ளுமாறு யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் அறிவித்துள்ளார்.

## விளையாட்டு அரங்கம்



# மண்ணின் மைந்தர்களா? மாற்றான் படைகளா?



ரொம் மூடி உயரப்பறப்பவர்

இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் ஜோன் ரைட்டின் பதவிக் காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து, புதிய பயிற்சியாளரைத் தேடும் படலத்தில் இந்திய கிரிக்கெட் சபை இறங்கியுள்ளது.

ஒரு தேசிய அணிக்குப் பயிற்றுவிப்பாளராகப் பணிபுரிவதற்குப் பல கிரிக்கெட் ஜாம்பவான்கள் போட்டியிடுவது ஒன்றும் புதுமையில்லை. இதற்கு இந்திய அணியின் பயிற்சியாளர் வெற்றிடமும் விதிவிலக்கல்ல. அன்றைய கிரேக் சப்பலில் இருந்து அண்மையில் ஓய்வுபெற்ற ஸ்ரீவ்வோ வரை இந்தப் பதவிக்கு விருப்பம் தெரிவித்திருந்தனர். இந்த வரிசையில் மேற்கிந்தியத் தீவுகளின் விவியன் றிச்சட்ஸ், அவுஸ்ரேலியாவின் டீன் ஜோன்ஸ், ரொம் மூடி, டேவ் வட்மோர் போன்றவர்களின் பெயர்களே அதிகம் அடிபட்டன. ஆனால் புதிய பயிற்சியாளரை நியமிப்பதற்காக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையால் தெரிவுசெய்யப்பட்ட ஆறுபேர் கொண்ட குழுவினர் இந்தப் பட்டியலில் இந்தியப் பயிற்சியாளர்களான சந்தீப் பட்டேல் , மொகிந்தர் அமர்நாத், றோஜர் பின்னி ஆகியோரின் பெயர்களையும் புதிதாக இணைத்துள்ளனர்.

ஜோன் ரைட் 2000 ஆம் ஆண்டு இந்திய அணிக்கு பயிற்சியாளராக வருவதற்கு முன்னர் இந்திய அணியின் பயிற்சியாளராக இருந்தவர் -இந்திய அணியின் முன்னாள் கப்டன் கபில் தேவ். 1999 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் பதவியேற்ற இவரால் அந்தப் பதவியைச் சிறப்பாகச் செய்ய முடியவில்லை. நியூசிலாந்துடன் சொந்த மண்ணில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரை மட்டுமே இவரது பயிற்சியின்கீழ் இந்திய அணி வென்றிருந்தது. இதன்பின் அவரும் தனது பதவிக் காலத்தை நீடித்துக்கொள்ளாமல், ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒருவருடத்துடனேயே பதவியில் இருந்து விலகி விட்டார். அவ்வாறே கபில்தேவுக்கு முன்பு இந்திய அணியின் பயிற்சியாளராக இருந்த அன்ஜுமன் கெய்க்வாட் கூட இந்திய அணியை நினைத்த அளவுக்குக் கொண்டுசெல்ல முடியவில்லை. இவ்வாறு உள்ளூர் பயிற்சியாளர்களின் திறமைகளில் திருப்தியின்மை ஏற்படவே, இந்திய கிரிக் கெட் சபையும் வெளிநாட்டு பயிற்சியாளரை நியமிப்பதில் கவனம் செலுத்தத் தொடங்கியது.

2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் புதிய பயிற்றுவிப்பாளரைத் தெரிவுசெய்யும் போது சிறிது காலம் பிடித்ததாயினும், அவரைத் தெரிவுசெய்வதற்கென்று ஒரு குழு அமைக்கப்படவில்லை. ஆனால் இப்போது மட்டும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஆறுபேர் கொண்ட குழுவை அமைத்தது ஏனென்று புரியவில்லை? இலங்கை கிரிக்கெட் சபைமாதிரி உள்முரண்பாடுகளால் சபை கலைக்கப்பட்டு ஒரு நெருக்கடி நிலை காணப்படுமாக இருந்தால், புதிய பயிற்சியாளரை நியமிக்க இடைக்கால சபை மாதிரி ஒரு குழு அமைப்பதில் ஒரு அர்த்தம் இருக்கும்.

குத்துவெட்டுக்கள் நிறைந்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கூட மியாண்டட்டின் பதவிக் காலம் முடிந்ததும், அந்த இடத்துக்கு மாற்றுக்கருத்துக்கு இடமில்லாமல் பொப் வூல்மரை பயிற்சியாளராக நியமித்திருந்தது. ஆனால் இந்திய கிரிக்கெட் சபை நிர்வாகம் நல்ல நிலையிலேயே உள்ளது. இவ்வாறிருந்தும் ஏன் இவர்களால் உறுதிபட ஒருவரைத் தெரிவு செய்யமுடியாமல் இருக்கிறது? அவர் சொந்த நாடாகவோ, வெளி நாடாகவோ இருப்பது வேறுவிடயம்.

இதேவேளை ஜோன் ரைட்டை பயிற்சியாளராக தெரிவு செய்யும்போது ராவிட்டின் சிபார்சை ஏற்றுக்கொண்டளவுக்கு, விலகிச் சென்ற ஜோன்ரைட்டின் சிபார்சை கிரிக்கெட் சபை ஏற்றுக் கொள்ளவில்லையென்றே எண்ணத் தோன்றுகிறது. ரொம் மூடியின் பெயரை பயிற்சியாளர் பதவிக்கு அவர் பரிந்துரை செய்தும் , கிரிக்கெட் சபை அதை ஏற்றுக்கொள்ளாது, ஏனையவர்களிட மிருந்தும் பதவிக்கு விண்ணப்பம் கோரியிருந்தமை இதை வெளிக்காட்டுகிறது.

இன்றைய காலப்பகுதியில் டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா தவிர ஏனைய எல்லா நாடுகளிலும் அந்நியப் பயிற்சியாளர்களே ஆதிக்கம் செலுத்தி வெற்றிபெற்று வரும் இந்த வேளையில், இந்திய கிரிக்கெட் சபை மட்டும் உள்ளூர் பயற்சியாளர்களில் கவனம் செலுத்துவது வியப்பையே தருகிறது. இரண்டு வாரங்களுக்கு முன்னர்தான் வசீம் அக்ரம் - வெளிநாட்டுப் பயிற்சியாளரின் பயிற்சியில் இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் அணிகளின் செயற்பாடுகள் முன்னேற்றம் கண்டுள்ளன என்றும், அவர்களால் நெருக்கடியில்லாத சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடிகிறது என்று கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



சந்தீப் பட்டேல் கூட்டுப்பறவை

யதார்த்தமாக ஒன்றைப்புரிந்து கொள்வோமாயின், ஒரு விடயத்தில் பலரது அபிப்பிராயங்களையும் கேட்டு ஏகமனதாக ஒரு முடிவை எட்டுவதென்பது சற்று சிக்கலான காரியமே. இந்த நிலையில் ஆறுபேர் கொண்ட குழுவினராலும் ஒருவரைத் தெரிவுசெய்வது இலேசான காரியமாக இருக்கப் போவதில்லை. முதலில் நான்கு பேருக்கு மட்டும் நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு விடுத்தவர்கள், பின்னர் மேலும் மூவருக்கு அழைப்பு விடுத்துள்ளமை அவர்களின் மனக்கிலேசத்தையே எடுத்துக் காட்டுகிறது.

ஜோன் ரைட் பதவி விலகிய உடனேயே அந்த இடத்துக்கு சுனில் கவாஸ்கரைப் பதவியேற்குமாறு அணுகியதைப் பார்க்கும்போதும், உள்ளூர் பயிற்சியாளர்களைப் போட்டியில் இணைத்துக் கொள்வதைப் பார்க்கும்போதும் அவர்களில் ஒருவருக்கு இந்த வாய்ப்பை வழங்கிவிடுவார்களோ என்ற ஐயம் இப்போது தோன்றியுள்ளது. உண்மையிலேயே ஜோன் ரைட் இந்திய அணிக்காகச் செய்த பணி மகத்தானது. உள்ளூர் பயிற்சியாளர்களைவிட அவரின் பயிற்சி நுணுக்கங்களாலும், வீரர்களுடனான நெகிழ்வுப் போக்காலும், புரிந்துணர்வாலும் இந்திய அணி கணிசமான வெற்றிகளைப் பெற்றிருந்தது. எனவே ரசிகர்களும் அவர் விட்டுச்சென்ற இடத்துக்கு ஒரு வெளிநாட்டுப் பயிற்சியாளர் வருவதையே எதிர்பார்த்துள்ளார்கள் என்பதே வெளிப்படை.

— விமலன்

# தங்கச் சுரங்கம்





வாங் லிகுயீங் பாட்டும் நானே

அண்மையில் ஷாங்காய், சீனாவில் முடிவடைந்த மேசைப் பந்தாட்ட உலக சம்பியன் ஷிப் போட்டிகளில் கலந்து கொண்ட அத்தனை நாடுகளையும் தூக்கிச் சாப்பிட்டு விட்டார்கள் சீன வீர வீராங்கனைகள். இங்கு நடைபெற்ற போட்டிகளில் வெல்லப்பட வேண்டியிருந்த ஐந்து தங்கப் பதக்கங்களையும் சீனர்கள் தட்டிக் கொண்டு போய்விட்டார்கள்.

சீனர்களின் மேசைப் பந்தாட்ட வல்லமை என்பது தனியுரிமை தான். 1996 அட்லான்டா ஒலிம்பிக் போட்டிகளில் அத்தனை தங்கங்களையும் வென்றவர்கள் இவர்களே. அதுபோதாதென்று 2000 ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில் தப்பாமல் அத்தனை தங்கங்களையும் அபகரித்துக் கொண்டார்கள்.

ஆனால் கண்பட்டதோ என்னவோ, ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் ஆண்கள் ஒற்றையர் போட்டிகளில் ஒரேயொரு தங்கப்பதக்கத்தை மட்டும் இழந்தது. மற்றும்படி எல்லாத் தங்கமும் சீனாவுக்கே. இழந்த அந்தத் தங்கம் தென்கொரியாவுக்காயிற்று.

இம்முறை எந்தப் பிழையும் விடாமல் அவ்வளவையும் அள்ளிக்கொண்டு போய்விட்டார்கள் சீனர்கள். இந்தச் சுற்றுப் போட்டியில் குறைகள் குற்றங்கள் என்று சுட்டிக்காட்டப்பட்டது குறைவு. ஆனால் ஏறத்தாழ எழுபது போட்டியாளர்கள் அரங்கநிலைமைகள் திருப்திகரமாக இல்லை என்று குறை கூறியிருந்தார்கள். ஆனால் சர்வதேச மேசைப் பந்துச் சம்மேளனம் (ITTF) இந் தக் குற்றச்சாட்டுக்களை மறுத்திருக்கிறது.

ஷாங்காய் GRAND STAGE பன்னிரண்டாயிரம் ரசிகர்களைக் கொள்ளக்கூடியது. அங்கு சீன ரசிகர்களே எல்லோருமாய் இருந்ததால், சீன வீரர்களுக்கு ஆதரவு எப்படி இருந்திருக்கும் என்று சொல்லத்தேவையில்லை.

— செந்தூரன்.



ஷாங் ஜிங்கிங் பாவமும் நானே

# தெரிவு சரியாக இருக்குமா?



பிளின்ரொப் இளவரசன்

எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ள அவுஸ்ரேலியா எதிர் ICC WORLD ELEVEN அணிகளுக்கிடையி லான SUPER TEST மற்றும் ஒரு நாள் போட்டி களுக்கான ICC WORLD ELEVEN அணியில் இடம் பெறும் சர்வதேச அதிஉயர் தகைமை கொண்ட முப்பது கிரிக்கெட் வீரர்களின் பெயர்கள் சென்ற வாரம் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த அணிக்கான தெரிவுக் குழுவுக்குத் தலைவர் சுனில் கவாஸ்கர் ஏனைய அங்கத்தவர் கள்மைக் அதர்டன், சேர் றிச்சட் ஹெட்லி, கிளைவ் லொயிட், ஜொன்ரி றோட்ஸ் மற்றும் அரவிந்த டீ சில்வா. முதலில் தெரிவு செய்யப்படும் முப்பது பேரில் இருந்து பின்னர் இருபது பேரை இவர்கள் தெரிவு செய்வார்கள். ஜூலை மாதத்தில் இந்த இருபது பேரின் பெயர்கள் அறிவிக்கப்படும்போது, அணித்தலைவர் மற்றும் உபதலைவரின் பெயர்களும் அறிவிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.


இந்த வகையில் முதன்முதலாக அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ள ICC SUPER SERIES ஒரு ஆறுநாள் டெஸ்ட் போட்டியையும் மூன்று ஒருநாள் சர்வதேச போட்டிகளையும், உள்ள டக்கியதாக இருக்கும். இதேவேளை இறுதியான பெயர்ப்பட்டியல் ஒகஸ்ட் மாதத்தில் வெளியிடப்படும்போது, டெஸ்ட் ஆட்டத்துக்கான பதின்மூன்று வீரர்களின் பெயர்கள் மற்றும் ஒருநாள் போட்டிகளில் பங்குகொள்ளும் வீரர்கள் பதினான்கு வீரர்களின் பெயர்களை அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். மேலும் இந்த ஆட்டங்கள் எல்லாம் ICC யால் உத்தியோக பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருக்கும். ஒரு நாள் போட்டிகளுக்கான பரிசு போன்றவற்றுக்காக 12லட்சத்து54ஆயிரம் அமெரிக்க டொலர்களும் SUPER TEST க்காக 13லட்சத்து 90ஆயிரம் அமெரிக்க டொலர்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

— அன்ரனி.



பொண்டிங் சக்கரவர்த்தி

# வேலிகள் சரியும் நேரம்



நெல்சன் மண்டேலா வர்ணஜாலம்

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் 2010 இல் நடைபெற இருப்பது தென்னாபிரிக்கா நாட்டில் என்பது பல உணர்வலைகளை எழுப்பியுள்ளது. 2010 நிகழ்வை ஏற்பாடு செய்யும் பொறுப்பை ஏற்றிருப்பவர் பிரபல்யமானவரான டெனி ஜோர்டான். ஒரு சர்வதேச விளையாட்டின் உயர்நிலைப் போட்டியொன்று நடைபெறும் போது. அந்த நாட்டின் பல்வேறு துறைகளின் வளர்ச்சி பிரபல்யம் என்பது பொதுவானது தான். ஆனால் தென்னாபிரிக்கா இதனை வேறுவிதமாகப் பார்க்கிறது. ஜோர்டான் இது பற்றிப் பேசும் போது - இந்த நிகழ்வு உலகின் முதன்மை நிகழ்வாக இருக்கும். அதோடு இது ஒரு ஆபிரிக்க நிகழ்வாக இருக்கும் என்பவர். தென்னாபிரிக்கா இந்தப் பெருமைபெற மண்டேலாவின் பங்களிப்பு அதிகம் என்பவர். நாங்கள் ஒன்றிணைந்த ஒரு தேசமாக இந்த நிகழ்வை நடத்திக்காட்ட விரும்புகிறோம் என்கிறார். அதோடு எதிர்காலத்தில் சர்வதேச நிகழ்வுகள் நடைபெறும் போது. ஆபிரிக்கக் கண்டத்தை ஓரக்கண்ணால் பார்த்து ஒதுக்கிவிடும் நிலைமையை 2010 உலகக் கிண்ண உதைபந்தாட்ட நிகழ்வுகள் மாற்றியமைக்கும். முழு ஆபிரிக்க நாடுகளுமே இந்த நிகழ்வை தம் நிகழ்வாக நினைத்து முழுமையாக ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்கிறார் இவர். இந்த உணர்வலைகள் சர்வதேசக் கண்ணோட்டத்துடன் பார்க்கும்போது வித்தியாசமானதாக். ஆனால் அவசியமானதொரு சிந்தனையாக இருக்கிறது.

இது ஒருபுறம் இருக்க உலகின் இன்னொரு பக்கத்தில் இருந்து 'பேச்சுப் பல்லக்கு தம்பி கால் நடை' என்பது போன்ற கருத்துக்கள் வெளிப்படுகின்றன. 2007 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவிருக்கும் கரிபியன் பிராந்தியத்தில் இருந்தே இவை கேட்கின்றன. ஏற்பாடுகள். அடிக்கட்டுமானத் தேவைகள் போன்ற விடயங்கள் எல்லாம் ஒருபுறம் இருக்க. முக்கியமானவிடயம் ஒன்றை இங்கு சுட்டிக்காட்டுகிறார்கள்.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் கரிபியன் பிராந்தியத்தில் அரங்கேறும் போது. அங்கு மேற்கிந்தியத் தீவுகள் அணியும் இடம்பெறும். அவ்வாறு பங்கு கொள்ளும் அணியில் இறைமையும் தன்னாதிக்கமும் உள்ள தனித்தனி நாடுகளின் வீரர்களே ஒன்றிணைக்கப்பட்டிருப்பார்கள். இவர்கள் வெவ்வேறு ஏழு நாடுகளில் விளையாடவேண்டியிருக்கும். அப்போது. உதாரணமாக சர்வதேச ரீதியில் நன்கறியப்பட்ட லாறா தனது தாய்நாடான ரினிடாட்டில் இருந்து ஒருமணி நேர விமானப் பயணத்தின் பின் கயானா நாட்டில் இறங்கும் போது தனது விசா. கடவுச்சீட்டு ஆகியவற்றைக் காட்டியே நாட்டுக்குள் நுழைய நேரிடும். இரு நாடுகளும் வெவ்வேறு நாணயங்களைக் கொண்டிருப்பதால். பொதுவான அமெரிக்க டொலரை இவர் நம்பவேண்டியிருக்கும். இது தொடரில் பரஸ்பரம் நாடுகளுக்கு இடையில் கட்டுப்பாடுகள் தளர்ந்த இலகு முறையொன்றினை அறிமுகப்படுத்த முனைந்தாலும். எதுவும் உருப்படியாக செய்து முடிக்கப்படவில்லை என்கிறார் முன்னாள் மேற்கிந்திய வேகப்பந்து வீச்சாளர் கொலின் குறொவ்ட். எனவே பார்படோஸ். அன்ரிகுவா. ஜமெய்க்கா மற்றும் இன்னும் ஏழு நாடுகளும் தனது அரசு நடைமுறைகளைப் பின்பற்றும்போது பல சங்கடங்கள் உருவாகும். இந்த நிலையில் மேற்கிந்திய அணிக்கே உரித்தான. தனித்துவமான. வினோதமான பிரச்சினை இது. நாடுகள் வேறுவேறு. அணியோ ஒன்று. லாறா எல்லைக்கோட்டைத் தாண்டி ஆறு அடித்தால் முழுக் கரிபியன் பிராந்தியமும் கைதட்டும். ஆனால் லாறா தன் கால் பதித்தால் விசாகேட்கும். வரி விதிக்கும். இது எல்லா மேற்கிந்திய வீரர்களுக்கும் பொருந்தும். பறவைகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்.



பிறைன் லாறா எத்தனை நிறங்கள்

— நிர்மலன்.

# இரைதேடும் பறவைகள்



ராகுல் ராவிட் நிமிர முடியுமா?

இந்திய -பாகிஸ்தான் கிரிக்கெட் தொடர் முடிவடைந்தாலும் இலங்கை ரசிகர்கள் இந்திய - இலங்கை அணிகளுக்கிடையிலான ஐந்து ஒருநாள் போட்டிகளைக் கண்டுகளிக்கலாம் என்று பெரும் ஆர்வமாக இருந்தார்கள். ஆனால் இலங்கையின் தெரிவு செய்யப்பட்ட கிரிக்கெட்சபை, நிர்வாக சபை போன்ற உள்வீட்டுப்பிரச் மற்றும் இடைக்கால சினைகளாலோ தெரிய வில்லை துரதிஷ்டவசமாக இந் தியா அந்தத் தொடர் பற்றி சாத கமான முடிவெடுக்கவில்லை.

ஆனால் இலங்கை அந்த ஐந்து ஒருநாள் போட்டிகளைத் தட்டிப் பழுக்க வைக்க முயல்வது போலத்தெரிகிறது. அதாவது ஜுலை மாதம் இரண்டு டெஸ்ட் போட்டி களில் கலந்துகொள்ள மேற்கிந்திய கிரிக் கெட் அணி இலங்கை வரு கிறது. டெஸ்ட் போட்டி முடிவடைய அதனைத் தொடர்ந்து முத்தரப்புத் தொடர் ஒன்று ஒகஸ்ட் 2 – 14 வரை நடை பெறவுள்ளது. இந்தத் தொடர் முடிந்ததும் ஏப்ரலில் நடை பெறுவதாக இருந்து நடை பெறாமற்போன ஐந்து ஒருநாள் போட்டி களை நிறைவு செய்ய இந்தியாவுக்குச் செல்ல இலங்கை விருப்பம் தெரிவித்துள்ளது. பாகிஸ் தான் தொடரின் பின் ஓய்வு தேவை என்பதாலேயே இலங்கையின் ஒருநாள் தொடரை இந்தியாபின்போட்டதென்றும், தற்போது ஒகஸ்டில் இந்தியா செல்லத் தாம் தயாராக இருப்பதாகவும், இதனை இந்தியா சாதகமாகப் பரிசீலிக்கும் என்று நம்புவதாகவும் இலங்கை கிரிக்கெட் சபை பிரதம நிறைவேற்று அதிகாரி டுலீப் மென்டிஸ் கூறியுள்ளார்.

இலங்கையின் இந்த விருப்பம் நிறைவேறும் பட்சத்தில் ரசிகர்களுக்கு நல்விருந்து கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஐந்து ஒருநாள் போட்டிகள் நடைபெற்று முடிவடைந்ததன் பின் சிம்பாப்வேக்கு இந்தியா சென்று இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும். நியூசிலாந்து உட்பட முத்தரப்பு ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் கலந்து கொள்ளும். இலங்கை அணி தாயகம் திரும்பி இங்கேயே பங்களாதேஷ் அணியுடன் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும். மூன்று ஒருநாள் போட்டிகளிலும் பங்கேற்கும். இது செப்ரெம்பரில் நடைபெற்று முடிய. நவம்பரில் மூன்று டெஸ்ட் போட்டிகள் விளையாட இலங்கை மீண்டும் இந்தியா செல்லும்.

இந்திய -இலங்கை அணிகள் இரண்டும் அடிபட்ட சிங்கங்களாக உறுமிக் கொண்டிருக்கின்றன. எனவே கொஞ்சக்காலத்துக்கு இரண்டு அணிகளும் யாரைச் சந்தித்தாலும் குதறித் தள்ளத்தான் முயற்சி செய்யும். அதிலும் இந்தியாவின் காயங்கள் படுபயங்கரம். இந்தியாவின் அணித் தெரிவுகளில் பல்வேறு மாற்றங்கள் வேகமாக நடைபெறலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றன. எனவே வரும் மாதங்களில் கர்ச்சனைகளுக்குக் குறைவிருக்காது.



ஜெயவர்த்தன பொய்கை கலங்கியுள்ளது

— ஜோசப் கிருஷ்ணா

# நான் சின்னப் பொண்ணு

ரெனிஸ் போட்டிகள் பொறுத்து அடுத்துவரும் மாபெரும் திருவிழா பிரெஞ் ஓபன் போட்டிகள். இதற்கு முன்னதாக இவ்வாரம் நடைபெறவுள்ள ரெனிஸ் போட்டி ரோம் மாஸ்ரர்ஸ் ரெனிஸ் போட்டிகள்.

பிரெஞ் ஓபன் போட்டிகளுக்கு முன்னதான பிரதான பயிற்சிக் களமாக மரியா ஷரபோவா ரோம் மாஸ்ரர் போட்டிகளைக் குறிப்பிடுகிறார். தொடர் சாதனை படைப்பார் என எதிர்பார்க்கப்பட்டவர் இவர். ஆனால் நீண்டகாலம் இந்தப் பதினெட்டு வயது இள மங்கையின் பெயர் பின்தள்ளப்பட்டுக்கொண்டே வந்தது. அண்மைக்காலத்தில் ஒவ்வொரு சுற்றுப் போட்டியிலும் வெவ்வேறு பெண்மணிகள் கிண்ணம் வென்றாலும் ரஷ்யாவைச் சேர்ந்த பதினெட்டே வயதான மரியா ஷரபோவாவின் பெயரை ஏனோ காண முடியவில்லை. ஆனால் மரியா மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கிறார். ஜேர்மனி ஓபன் போட்டிகளில் காலிறுதிப் போட்டியில் தோற்றுப்போய்விட்டார் இவர்.இருந்தாலும் இதுபற்றி கருத்துக் கூறும் இவர் – நான் பதினெட்டு வயது மட்டும் நிரம்பியவள். அடுத்த வாரமே நான் நம்பர் வண் ஸ்தானத்தைப் பெறவேண்டும் என்று எல்லோரும் விரும்புகிறார்கள். சில தோல்விகளைச் சந்தித்தாலும்.அதனால் நான் மனம் தளர்ந்து விடப்போவதில்லை. நான் தோல்வியைக் கண்டதும் ஒரு புறத்தில் போய் ஒதுங்கி நின்று அழுது கொண்டிருக்கமாட்டேன். போராடியே தீருவேன் என்று மிகுந்த தைரியமாகக் கூறுகிறார் மரியா ஷரபோவா.



மரியா சரபோவா ரஷ்ய எக்ஸ்பிரஸ்

கடந்த வருடம் ரோம் மாஸ்ரர்ஸ் வென்றவர் அமெலி மொறிஸ்மோ இம் முறை அவரும் கலந்து கொள்கிறார். இவர்களை விட செரினா வில்லியம்ஸ். எலினா டிமென்ரீவா,ஸ்வெட்லானா குஸ்நெட்சோவா, வேரா செவன றோவா, நாடியா பெட்ரோவா என்று ஒரு நட்சத்திர வரிசையே இந்தப் போட்டிகளில் கலந்துகொள்ள இருக்கிறார்கள். ஆனால் அண்மைக் காலத்தில் சக்கை போடுபோடும் ஜஸ்ரின் ஹெனின் ஹார்டெய்ன் இந்தச் சுற்றுப் போட்டியில் இல்லை.

யார் இருந்தால் என்ன. இல்லாவிட்டால் என்ன. மரியா ஷரபோவாவின் இலக்கு ரோமாபுரியை வெற்றிகொள்வது மட்டுமல்ல, அதற்கப்பால் பிரான்ஸைக் கைப்பற்றி அப்படியே உலகம் முழுவதையும் தன்கைக்குள் கொண்டு வருவது தான். அதாவது இவரது வயதுக்கு இவரது பேச்சு எல்லோருக்கும் பெரிய அபாய அறிவிப்பாகத்தான் இருக்கப் போகிறது. சின்ன வயதாக இருந்தாலும் ஆசைக்கு அளவில்லை. அந்தப் பேராசையிலும் அதீத திறமை கலந்த நம்பிக்கை இருக்கிறது. ஷரபோவா சாதாரணமானவரல்ல என்பது உண்மை.

— மக்டலின்

விளையாட்டு அரங்கம்

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

# தமிழரின் பெரிய மூலதனமாகிய கல்வியை எவரும் அழிக்க முடியாது!

## திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் ரஞ்சன் லாலா

(மன்னார்)

நீடோ நிறுவனமானது தனது கல்விச் செயற்பாட்டை மிகவும் கல்வியில் பின்தங்கிய பிரதேசங்களில் மேற்கொண்டு வருகிறது. இந்த வகையில் இந்த வள நிலையத்தை இந்த இடத்தில் உருவாக்கியதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். அத்துடன் தமிழர்களின் பெரிய மூலதனம் கல்வியாகும். இந்தக் கல்வியை எவராலும் அழிக்க முடியாது என விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் ரஞ்சன் லாலா தெரிவித்தார்.

நோர்வே அபிவிருத்தி நிதியத்தின் உதவியுடன் நீடோ நிறுவனத்தால் நேற்று முன்தினம் மன்னார் ஆண்டாங்குளம் பாடசாலையில் திறந்து வைக்கப்பட்ட கல்வி வள நிலையத் திறப்பு விழா நிகழ்வில்- பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நீடோ நிறுவனத்தின் பணிப்பாளர் செ.செல்வராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில்-

தமிழர்களின் கல்வியைத் திட்டமிட்டு அழிக்கும் நோக்கத்துடன் அரசாங்கம் செயற்பட்டு வருகிறது எனவும், பல்கலைக்கழகத்துக்குப் புகும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்குடன் கல்வி முறையில் தரப்படுத்தல் செயற்பாட்டை மேற்கொண்டது. நீடோ நிறுவனமானது -இப்படியான கல்வி வள நிலையங்களை உருவாக்க வேண்டும், இதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாம் எந்த வகையில் உதவ முடியுமோ அந்த வகையில் உதவுவோம் எனவும் கூறினார்.

இந்தநிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான பாஸ்கரன் ஏற்றிவைத்தார்.

கல்வி வள நிலையப் பெயர்ப் பலகையை மடு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜேசுதாசன் திறந்து வைத்ததுடன்,கல்வி வள நிலையக் கட்டடத்தை விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் ரஞ்சன் லாலா திறந்து வைத்தார். விஞ்ஞான ஆய்வு கூடத்தை ஆட்காட்டிவெளி பங்குத்தந்தை சீமான் அடிகளார் திறந்துவைத்தார்.

இதனைத் தொடர்ந்து தலைமையுரையை நிறுவனப் பணிப்பாளர் செல்வராஜும், சிறப்புரைகளை பங்குத்தந்தை சீமான்,பாடசாலை அதிபர் விஸ்வராஜா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜேசுதாசன், தமிழர் புனர்வாழ்வுக்கழக மன்னார் மாவட்டப் பணிப்பாளர் கேசவன் ஆகியோர் நிகழ்த் தியிருந்தனர்.

இறுதியில் நீடோ நிறுவனத்தின் வளநிலைய கணித ஆசிரியரான நந்தனின் நன்றி உரையுடன் நிகழ்வு நிறைவுற்றது.

## ஓமந்தை சோதனைச் சாவடியில் வாகனங்களைப் பதிவு செய்ய விசேட கணினி நிலையம்

(வவுனியா)

ஓமந்தைச் சோதனைச் சாவடியில் வாகனங்களைப் பதிவு செய்வதற்கான விசேட கணினி நிலையமொன்றை வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரி.எம்.தென்னக்கோன் வைபவரீதியாக நேற்று திறந்து வைத்தார்.

தென் பகுதியிலிருந்து ஓமந்தை சோதனைச் சாவடியூடாக வாகனங்கள் வடபகுதிக்குக் கடத்திச் செல்லப்படுவதைத் தடுக்கும் நோக்குடனேயே இந்த நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

வாகனங்கள் தென் பகுதியிலிருந்து கொள்ளையடிக்கப்பட்டும், கடத்திச் செல்லப்பட்டும், இயந்திர இலக்கங்கள் மாற்றப்பட்டும் வன்னிக்குக் கொண்டு சென்று விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளமை தெரிய வந்துள்ளதாகப் பொலிஸ் அத்தியட்சகர் கூறினார். இவ்வாறான வாகனக் கடத்தலைத் தடுத்து நிறுத்துவதற்கு இந்தக் கணினி நிலையம் பெரிதும் உதவுமென பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.




## சிறுவர் பூங்கா விளையாட்டு விழா

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் லண்டன் கிளையின் அனுசரணையுடன், ஊரகவளர்ச்சிப் பணி நிர்வகிக்கும் சொக்கலிங்கம் சிறுவர் பூங்காவின் விளையாட்டுவிழா- நாளை திங்கட்கிழமை மாலை 2.30 மணிக்கு முழங்காவில் இரணைமாதா நகரிலுள்ள சிறுவர் பூங்கா மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஏப்ரல் 15

1721 - இயந்திரத் துப்பாக்கித் தயாரிப்பு லண்டனில் தொடக்கப்பட்டது.

1903 - பெர்ஷியன் குடாவில் ரஷ்யா கடற்படைத் தளத்தையோ அல்லது கோட்டைகளையோ அமைத்தால், கடுமையான விளைவுகளைச் சந்திக்க வேண்டிவரும் என்று பிரிட்டன் எச்சரித்தது.

1917 - அட்ரியாடிக் கடலில் நடந்த கடல் போரில் ஒஸ்ரியக் கடற்படைப் பிரிவு நேசப் படைகளின் 14 கப்பல்களை முழ்கடித்தது.

▸▸ - பிரிட்டனில் ரஷ்யாவின் கொடி நாள் கடைப்பிடிக்கப்பட்டது. மக்கள் கொடிகளை வாங்க மறுப்புத் தெரிவித்தனர்.

▸▸ - அமெரிக்காவில் கட்டாய இராணுவப் பணிச்சட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.

1918 - ரஷ்யாவின் இனோ கோட்டை தரைமட்டமாக்கப்பட்டது. இந்த வருடம் ஜனவரி 28 ஆம் திகதி தொடங்கிய இந்தப் போரில் ஏறக்குறைய 100, 000 படை வீரர்கள் கொல்லப்பட்டனர்.

▸▸ - அமெரிக்காவில் நியூயோர்க் கிற்கும், வொஷிங்டனுக்கும் இடையே முதன் முதல் விமானப் போக்குவரத்து ஆரம்பமாகியது.

▸▸ - ஜேர்மனிக்கு எதிராக சீனா- ஜப்பான் இராணுவ ஒப்பந்தம் பீஜிங்கில் கையெழுத்திடப்பட்டது.

▸▸ - லண்டனில் கூடிய நேச நாடுகளது உயர் போர்ச்சபையினது கூட்டத்தில் துருக்கி மீதும், பல்கேரியா மீதும் போர் தொடுக்கும்படி அமெரிக்கா விடம் கோரிக்கை விடப்பட்டது.

1919 - பிரான்சில் நடந்த சமாதான மாநாட்டில் கலந்து கொண்டு விட்டு, திரும்பி வந்து கொண்டருந்த யூதர் தலைவர் ஆரன் ஷானின்- விமானம் பௌலோகென் துறைமுகத்தில் நொருங்கி வீழ்ந்ததால், அவர் நீரில் மூழ்கி இறந்தார்.

1930 - கலிபோர்னியாவில் ஒக்லாண்ட் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட போயிங் பயணிகள் விமானத்தில் முதன் முதலாக மிஸ் எல்லன் சர்ச் என்ற பெண்- விமானப் பணிப் பெண்ணாகப் பணி புரிய ஆரம்பித்தார்.

1935 - ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்களைத் தொண்டர் படை என்ற பெயரில் ஊதியமில்லாது பயன்படுத்தி, 22 புகையிரத நிலையங்களைக் கொண்டதாக அமைக்கப்பட்ட மாஸ்கோ மெட்ரோ எனப்படும் சுரங்க ரயில்பாதை- சோவியத் ரஷ்யாவில் ஸ்டாலினால் திறந்து வைக்கப்பட்டது.

1937 - கம்யூனிஸ்ட்டுகளது மிரட்டல்களுக்குப் பயந்து, ஸ்பெயின் பிரதமர் டார்கோ கபாவ்லெரோ பதவி விலகினார்.

1941 - பிரிட்டனில் ஜெட் ரக போர் விமானத்தின் வெள்ளோட்டம் நடைபெற்றது.

1944 - ஜேர்மனி ஹங்கேரியிலிருந்த யூதர்களை, ஆஷ்விட்ஸ் மரண முகாம்களுக்கு அனுப்பி வைத்தது.

1945 - ஜேர்மனியின் கடைசிப் படையணி யூகோஸ்லேவியாவில் சரணடைந்தது.

1955 -ஒஸ்ரியாவுக்கு பூரணமான சுதந்திரத்தைக் கொடுக்கும் உடன்படிக்கையில்- அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன் , பிரான்ஸ் ஆகிய நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் கையெழுத்திட்டனர்.

1957 - பிரிட்டன் தன் முதல் அணுகுண்டை மத்திய பசுபிக்கில் வெடிக்க வைத்து சோதனை செய்தது.

1960 - ரஷ்யாவால் ஸ்புட்னில்-4 என்ற முதலாவது விண்கலம் ஏவப்பட்டது.

1966 - வோஷிங்டனில் வெள்ளை மாளிகையைப் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் சுற்றி வளைத்துக் கொண்டனர்.

1967 - பிரிட்டிஷ் அரசுக்கு எதிரான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் சீனாவின் முக்கிய நகரங்களில் இடம் பெற்றன.

1974 - இஸ்ரேலில் தீவிர வாதிகள்- 18 பள்ளிச் சிறுவர்களைச் சுட்டுக் கொன்றனர்.

1987 - சோவியத் எனர்ஜியா எனும் மிகமிக ஆற்றல் மிக்க ஏவுகணையின் வெள்ளோட்டம் நடைபெற்றது.

1988 - ஆப்கானிஸ்தானில் இருந்து ரஷ்யப் படைகள் வெளியேறத் தொடங்கின.

1992 - நேபாளத்தைச் சேர்ந்த ஆங்ரிட்டா ஷெர்ப்பா என்பவர்- 8848 மீற்றர் உயரமுடைய எவரெஸ்ட் சிகரத்தை ஏழாவது தடவையாக செயற்கைச் சுவாச உதவியல்லாமலே சென்றடைந்தார்.

▸▸ - சர்வதேச குடும்ப தினம்.

தொகுப்பு - சந்துரு

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு கருத்தரங்கு

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழக சமூக ஆற்றுப்படுத்தல் பிரிவால் ஒழுங்கமைக்கப்பட்டு, நடத்தப்பட்டு வரும் மாவட்ட ரீதியிலான உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான கருத்தமர்வு நிகழ்வு -நேற்று இரண்டாவது நாளாக நடைபெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப் பணியக கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்தக் கருத்தமர்வில் சமூக ஆற்றுகைப்படுத்தல் பிரிவின் பணிப்பாளர் இ.ம.செல்வராசா, முல்லைத்தீவு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களைச் சார்ந்த பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொண்டனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசிய இ.ம.செல்வராசா கருத்தமர்வு ஒழுங்கமைக்கப்பட்டு இருப்பதன் நோக்கம் பற்றி எடுத்து விளக்கினார்.

சமூக மட்டத்தில் மக்களின் தேவைகள் என்ன? அந்த மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் என்ன? அவற்றை எவ்வாறு இனங் காண்பது? அந்தப் பிரச்சினைகளுக்கு எப்படியான தீர்வை முன்வைக்க வேண்டும் என்பது பற்றியும், எமக்குள் நாம் ஒவ்வொருவரும் தீர்க்கமான விடைகளை முதலில் தேடவேண்டும்.

ஒரு வேலைத் திட்டத்தை நாம் முன்னெடுப்பதற்கு முன்பாக எந்த மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு வேலைத் திட்டங்களை முன்னெடுக்க விளைகிறோமோ, அந்த மக்களுடன் கலந்துரையாடி, அவர்களது எதிர்பார்ப்புகள் தொடர்பான கருத்துக்களை நாம் உள்வாங்கிக் கொண்டு, எம்மால் முன்னெடுக்கப்படவிருக்கின்ற வேலைத் திட்டங்கள் பற்றியும், எம்மிடமுள்ள வள அணிகள் பற்றியும் நாம் தெளிவாக அந்த மக்களிடமே எடுத்து விளக்கவேண்டும்.

அப்போதுதான் எந்த மக்களுக்காக நாம் பணியாற்ற வேண்டுமென்று முயற்சிக்கின்றோமோ, அந்த மக்களினது பங்களிப்புடன் கூடிய எமது வேலைத்திட்டச் செயற்பாடுகளை நாம் வெற்றிகரமாக முன்னெடுக்கவும் முடியும். அதேவேளை அந்த மக்களின், சமூகத்தின் அபி விருத்தியைக் காணவும் முடியும் எனத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பாகவும், அந்தப் பிரச்சினைகளை இனங்கண்டு, அந்தந்த வேலைத் திட்டச் செயற்பாடுகளை எவ்வாறு திட்டமிட்டு முன்னெடுப்பது என்றும் ஆராயப்பட்டது.

மேலும் சமூகப் பொருளாதார ரீதியாக மக்களை முன்னேற்றமடையச் செய்வதற்கு எப்படியான அணுகுமுறைகளை ஒவ்வொரு நிறுவனங்களும் கொண்டிருத்தல் வேண்டும் என்பது பற்றியும் விரிவாகக் கருத்துப் பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பாரிய இழப்புகளுக்கும் மத்தியில், இடைத்தங்கல் முகாம்களில் வாழ்ந்து வரும் மக்களின் தேவைப்பகுப் பாய்வுகளை மேற்கொண்டு, அந்த மக்களின் பங்களிப்புடன்கூடிய மூன்றாம் கட்ட வேலைத்திட்டச் செயற்பாடுகள் எவ்வாறு ஒருங்கிணைத்து முன்னெடுப்பது என்பது பற்றியும் இந்தக் கருத்தமர்வில் விரிவாக ஆராயப்பட்டன.

பிற்பகல் 4.30 மணிவரை நடைபெற்ற இந்தக் கருத்தமர்வில் -தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் ரவிச் சந்திரன், தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, சமூக ஆற்றுப்படுத்தல் பிரிவின் ஆலோசகர் றஜனி இக் பால், கிளிநொச்சி மாவட்ட அரசசார் பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் கணேசபிள்ளை ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

## மன்னார் மாணவர் சங்கத்தால் கண்டனக் கடிதங்கள் கையளிப்பு

(மன்னார்)

மன்னாரில் பொலிஸாரின் வன்முறை நடவடிக்கைகளைக் கண்டித்து தமிழீழ மாணவர் சங்கத்தின் மன்னார் கிளையினர் கடிதம் மூலம் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு இந்தக் கண்டனக் கடிதங்களை அனுப்பி வைப்பதற்காக அவை அனைத்தும் அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டன.

மன்னாரில் அண்மையில் நடைபெற்ற எதிர்ப்புப் போராட்டமொன்றின் போது, தமிழீழ மாணவர் சங்க காரியாலயத்தின் மீது பொலிஸாரால் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே மாணவர்களால் இந்தக் கண்டனக் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

தமிழீழ மாணவர் சங்கத் தலைவர் ரீகனின் தலைமையில் மாணவர்கள் இந்தக் கடிதக் கையளிப்பில் பங்கேற்றனர்.

சமாதான காலத்தில் மக்களின் எழுச்சிகளை அடக்க முற்பட்டால், தாம் தமிழ்த் தேசியத்துக்காகப் போராட வேண்டி ஏற்படுமென இந்தக் கடிதங்களில் மாணவர் சங்கம் எச்சரித்துள்ளது.

## அரச ஊழியருக்கான சிங்களப் பயிற்சி நெறி கிளிநொச்சி மத்திய கல்லூரியில் ஆரம்பம்

(கிளிநொச்சி)

அரச ஊழியர்களுக்கான அடிப்படைச் சிங்களப் பயிற்சி வகுப்பு - கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் ஆரம்பமாகியது.

தேசிய ஒருமைப்பாட்டுச் செயற்திட்டப் பணியகத்தின் அனுசரணையுடன் முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தின் மும்மொழிப் பயிற்சித் திட்டத்தின் கீழ் இந்தப் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி வகுப்பை கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலக பிரதம எழுதுநர் வ.வன்னியசிங்கத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்தப் பயிற்சி நெறியின் போதனாசிரியராக கிளிநொச்சி மாவட்டப் பதிவக பிரதம எழுதுநர் அரசகேசரி நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதி செவ்வாய், வியாழக்கிழமைகளில் பிற்பகல் 2.45 மணி முதல் 4.45 மணி வரை பயிற்சி வகுப்பு நடைபெறும்.

இந்தப் பயிற்சிநெறி ஆரம்ப நிகழ்வில் வடக்கு - கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத் திப் பயிற்சித் திணைக்களப் பிரதிச் செயலர் சி.கிருஷ்ணானந்தன் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது*
*தூக்கம் கடிந்து செயல்.* திருக்குறள்

# நமது நோக்கு

## குடும்ப உறவுகளை பாதிக்கும் ஆபாச ஊடகங்களின் ஊடுருவல்

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன. இவ்வன்முறைகளில் ஈடுபடுபவர்கள் சிலர் கைதுசெய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, தண்டனைக்குள்ளானாலும் பலர் சட்டத்தில் உள்ள ஓட்டைகளைப்பயன்படுத்தியும், வேறு வகையிலான தமது உள்ளக - மேலக செல்வாக்குகளையும், பணபலத்தையும் பயன்படுத்தி தொடர்ந்து தப்பிக்கொண்டே வருகிறார்கள் என்பது ஒன்றும் இரகசியமான விடயமல்ல.

இதனை மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான வழக்கறிஞரான கல்யாணந்த திரணகம என்பவர் ஒப்புக்கொண்டுள்ளதுடன், வன்முறைகள் அதிகரிப்புக்கு ஆபாச சஞ்சிகைகளின் கட்டுப்பாடற்ற பரம்பலும் ஒரு முக்கிய காரணம் என்பதையும் அவர் தெரிவித்துள்ளார்.

தென்பகுதியில் இத்தகைய பன்மொழிகளில் வெளியாகும் ஆபாச சஞ்சிகைகளின் விற்பனை எத்தகைய தட்டுப்பாடும், கட்டுப்பாடுமற்ற நிலையில் இருப்பது உண்மையே. வடக்கிலும் கிழக்கிலும் நிலைமை மாறுபட்ட தன்மை கொண்டதாகவே உள்ளது. ஆபாச சஞ்சிகைகள் என பெருமளவில் எதனதும் நடமாட்டம் இல்லாவிட்டாலும், நவீன இலத்திரனியல் சாதனங்களூடாக ஆபாச எண்ணங்களைத் தூண்டும், கலாசார சீரழிவுக்கு வழிகாட்டும் நச்சு ஊடகங்களின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் இளைஞர்களின் தொகை அதிகரித்து வருகின்றதென்றால் அது மிகையில்லை.

ஆபாச வீடியோ ஒளிநாடாக்கள், இறுவட்டுக்கள், போன்றவற்றை குடாநாட்டில் தாராளமாகக் கிடைக்கும் வண்ணம் அதனைப் பரப்பிவரும் நாசகார சக்திகளின் பின்னணியில் முதலில் குறிப்பிட்ட இடத்தின் ஓட்டைகளை, உள்ளக - மேலக அதிகாரபீடச் செல்வாக்குகளை, பணத்தைப் பயன்படுத்தி தப்பிக்கொள்ளும் சமூகத்தில் பலதரப்பட்ட தீயசக்திகள் இருக்கின்ற தென்பதும் தெரிந்த விடயமே.

இத்தகைய சமூகவிரோதப் போ்வழிகளே இன்று இங்கு பெண்கள் மீதும், சிறுவர்கள் மீதும் வன்முறைகளைத் தூண்டும் பேர்வழிகளுக்கு மட்டுமல்ல, குடும்ப - சமூக உறவுகளிடையே குழப்பத்தையும், மனக்கிலேசங்களையும் மட்டுமல்ல பிரிவுகளையும், பிளவுகளையும் ஏற்படுத்தும் நச்சு விதைகளை பரப்பி மக்களின் பலவீனத்தைப் பயன்படுத்தி பணம் அள்ளுவோராகவும் உள்ளனர்.

வரலாற்றுத் துயர் தந்த இடப்பெயர்வுக்குப் பின்னர் அரச கட்டுப்பாட்டின் கீழ்வந்த வடக்கு - கிழக்கு பிரதேசங்களிலேயே இந்த ஆபாச ஊடகங்களின் பரம்பல் அதிகரித்தமைக்கு பல புறக்காரணிகள் உண்டு. குறிப்பாக சுதந்திர உணர்வும், விடுதலைவேட்கையும் கொண்டு வளரும் தமிழ் மக்களின் இளைய சந்ததியை மந்த புத்தியுள்ள கலாசாரமற்ற சமுதாயமாக மாற்றினால், அவர்களின் போராடும் சிந்தனையின் முனையை மழுங்கச் செய்துவிடலாம் என்ற உளவியல் யுத்த நடவடிக்கையின் ஓரங்கமாகவும் சில பிரிவினர் இதனை மேற்கொண்டனர் என்று கூறப்பட்டுவருவதையும் எவராலும் நிராகரிக்க முடியாது. உலகம் பூராகவும் ஆக்கிரமிப்பு இராணுவங்கள் தங்களால் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் மக்களின் கலாசாரத் தனித்துவத்தை அழிக்க இந்த ஆபாச ஊடகங்களைப் பரம்பலாக்குவது வழமையான விடயமேயாகும்.

இதனை விடவும் சமூகச் சீரழிவை - கலாசாரசீரழிவை - சினிமா என்ற கலை ஊடகத்தினூடாக தமிழ் மக்களிடையே பெருமளவுக்கு பேரழிவை ஏற்படுத்தும் வகையில் பரப்புவதில் தென்னிந்திய தமிழ் சினிமாவுக்கு பெரும் பங்குண்டு. தென்னிந்திய தொலைக்காட்சி அலைவரிசைகளூடாகவும் இந்த 'விஷம்' கக்கப்பட்டுவருவதை தனியாகக் குறிப்பிடவேண்டிய அவசியமேயில்லை.

பகுத்தறிவுக்கொவ்வாத கதைகள் காடையர்களையும், கயவர்களையும் கதாபாத்திரங்களாக்கி அவர்களுக்கு கதாநாயக அந்தஸ்து வழங்கும் கதாசிரியர்கள், இரட்டைஅர்த்த ஆபாச வரிகளை பாடல்களாகப் பொழியும் 'சில்மிஷ' சிந்தனைவாதிகளாக கவிஞர்கள். அரைகுறை நிர்வாணிகளின் காட்சிப்படுத்தி காசாக்கும் கலாரசிகர்களான இயக்குனர்கள். ஆர் கெட்டழிந்தால் என்ன நமது பணப்பெட்டி நிறைந்தால் போதுமென நினைக்கும் வக்கிரபுத்திகொண்ட படாதிபதிகள் பெருமளவில் - ஆட்சிபுரியும் தென்னிந்தியத் திரையுலகு, இன்றைய தமிழ்மக்களின் கலாரசனையை சீரழித்து ஆபாச எண்ணங்களை அவர்களின் மனதில் உருவாக்கி - தமிழ் மக்களை குறிப்பாக இளைய தலைமுறையினரை நாசமாக்கி வரும் அயோக்கியத்தனத்தை புரிந்து வருகின்றது என்பது உண்மையே...

எங்கோ, எப்போதோ, எவராலோ எடுக்கப்படும் கலைத்தரமிக்க படங்களுக்காக இதனை மன்னிக்க முடியாது.

இன்று தமிழ்த்திரைப்படங்கள் ஆபாசக்குப் பைகளாக மட்டுமல்ல, குடும்பங்கள் சமூகங்களிடையே குழப்பங்களையும், பெண்கள் சிறுவர் மீதான வன்முறைகளைத் தூண்டவும் காரணமாகி வருகின்றன. 'சின்னத்திரை'எனப்படும் தொலைக்காட்சி அலைவரிசைகளில் தமிழில் வெளியிடப்படும் மெகாசீரியல்கள், சீரியல்கள் பலவும் இந்தத் தரத்தைச் சேர்ந்தவைகளே.

இவைகள் எம்மக்களின் நேரத்தையும் கொன்று, மனங்களையும் கொன்று, குடும்பஉறவுகளில் முரண்நிலைகளையும் உருவாக்கும் நச்சுத்தன்மை கொண்டவையாகவே பெரும்பாலும் உள்ளவை எனலாம்.

நேரடியாக ஆபாச எண்ணத்தைத் தூண்டும் படங்களை சஞ்சிகைகளை இனங்கண்டு களைந்து விடலாம். ஆனால், *இதே பணியை கலை, பொழுதுபோக்கு என்ற பெயரில் மெல்ல* மெல்ல செய்யும் ஊடகங்களை என்ன செய்வது? கலாசாரம் பேணுவோர் இதனைக் கவனிப்பது நல்லது. உலகக் குடும்ப நாளில் இது குறித்து சிந்திப்பதும் நல்லது.

## நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# சிவராமின் படுகொலையில் ஜே.வி.பியின் பங்கு என்ன?

ஊடகமேதை மாமனிதர் சிவராம் கொழும்பு நகரில் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் இரண்டு வாரங்களுக்கு மேலாகிவிட்டன. கொலையாளிகள் பற்றி இன்னமும் எதுவித சமிக்ஞைகூடக் கிடைத்ததாகத் தகவல் இல்லை. நீர் முன்பே சொன்ன மாதிரி மர்மம் துலங்காத கொலைகளில் இதுவும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுவிடும் போல்தான் தெரிகிறது என்று சொன்னபடியே வந்தமர்ந்தார் பரமசிவம்.

இப்படிச் சொல்லிக்கொண்டுவரும்போதே ஏதோ புதிதாக ஒரு சந்தேகம் உமக்குத்தலை தூக்கியிருக்கிறதுபோல் தெரிகிறது. சொல்லவந்ததைச் சொல்லும் நாங்கள் என்ன துப்பறியும் சாம்புவா? ஏதோ எங்களுக்குத் தெரிந்தவற்றைச் சிறிது அலசி அதில் கொஞ்சம் ஆறுதலடைவோம் என்றேன்.

போனவாரம் வெளிவந்த சண்டே லீடர் வாரப் பத்திரிகையில் கனடாவிலிருந்து டி.பி.எஸ் ஜெயராஜ், சிவராம் கொலை பற்றி எழுதியிருந்ததைப் பார்த்திருப்பீர். சிவராம் கடத்தப்பட்டுச் சில மணிநேரத்தின் பின்னர்தான் நாடாளுமன்ற வளாகத்துக்கு சமீபத்தில் ஜப்பான்-லங்கா நட்புறவுப் பாலத்துக்கருகில் திவயின ஓயாவின் பக்கத்தில் சிவராமின் உடல் போடப்பட்டிருந்தது. அந்த இடத்தில் இரத்தம் இருக்கவில்லை. இதனால் அவர் வேறொரு இடத்தில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டபின்பே கொண்டுவந்து போடப்பட்டிருக்கிறார். தன் கையாலேயே அவரைக் கொலை செய்யவேண்டுமென்று கருணா சொல்லியிருந்திருக்கிறார். இதனால் கடத்திக்கொண்டு போனவர்கள் சிவராமை கருணா இருந்த பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டுபோயிருக்கிறார்கள். கருணா தன்கைகளாலேயே அவரைச் சுட்டுக் கொலை செய்திருக்கிறார் என்று ஜெயராஜ் எழுதியிருந்தார். இதை ஊகம் என்று சொல்லமுடியாதவாறு டி.பி.எஸ்.ஜெயராஜ் தெளிவாக எழுதியிருந்தார். ஆனாலும் அது ஊகம்தான். என்று பரமசிவம் சொல்லவும்.

பிறகென்ன ஆனால் என்று தொடருகிறீர் என்று கேட்டேன்.

ஆனால் ராவய என்ற சிங்களப் பத்திரிகையின் ஆசிரியரும், சிவராமின் ஒரு நண்பருமான விக்ரர் ஐவன் எழுதியிருப்பதைப் பார்த்திருக்கிறீரா? என்று கேட்டுவிட்டு பரமசிவமே தொடர்ந்தார். சிவராமும் அவரது நோர்த்-ஈஸ்ட் ஹெறால்ட் பத்திரிகையின் புகைப்படப்பிடிப்பாளர் புத்திக வீரசிங்கவும் விடுதலைப் புலிகளின் உளவாளிகள் என தமது அமைப்பால் வெளியிடப்படும் லங்கா என்ற பத்திரிகையில் ஜே.வி.பியினர் செய்தி வெளியிட்டனர். இது ஊடகத்துறை சார்ந்தோரைப் பெரும் கவலைக்குள்ளாக்கியது....

சிவராம் கொலை செய்யப்பட்ட அன்றிரவு - அவர் கடத்திச் செல்லப்படுவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னர்கூட - சிவராம் (விக்ரர் ஜவன்) எனது கையடக்கத் தொலைபேசிக்குத் தொடர்பு கொண்டு புத்திக வீரசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து, உண்மையான நிலையை வெளிப்படுத்தும் விதத்தில் பகிரங்கமாகக் கருத்து வெளியிடாமைக்காக என்னைக் கடிந்துகொண்டார். இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசமொன்றில் கருணா தரப்பினரால் பேணப்பட்டுவரும் முகாமின் புகைப்படத்தைப் புத்திக வீரசிங்கவே எடுத்திருந்தார். அதேபோன்று புலிகள் அமைப்பின் மணிராசகுளம் முகாமின் புகைப்படத்தையும் வீரசிங்கவே எடுத்திருந்தார். புத்திக வீரசிங்க தற்போது ஜே.வி.பியினரால் குற்றஞ்சாட்டப்படுவது போன்று புலிகளின் உளவாளியாக இருப்பின் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு *பின்னடைவை ஏற்படுத்துவதாக அமையக்கூடிய மணிராசகுளம்* முகாமின் படத்தைப் பிரசுரத்துக்காக அவர் பத்திரிகைக்கு வழங்கியிருந்திருக்கமாட்டார். தாம் முன்னர் கடமையாற்றிய லக்பிம பத்திரிகையிலிருந்து விலகிக்கொள்ள நேர்ந்தமையையடுத்தே புத்திக வீரசிங்க சிவராமின் பத்திரிகையில் இணைய நேரிட்டது. அதனால் கடைசியில் அவர் இனத்துரோகி எனவும் விமர்சிக்கப்படவும் நேரிட்டது. தாம் ஒரு தமிழரானபடியால் தம்மை விடுதலைப் புலிகளின் உளவாளியெனச் சந்தேகப்பட இடமேற்பட்டிருக்கக்கூடும். ஆனால், சிங்கள இனத்தைச் சேர்ந்த புத்திக வீரசிங்கவுக்கு தமது பாதுகாப்புத் தொடர்பாகப் பிரச்சினை எழக்கூடுமெனவும் சிவராம் தெரிவித்திருந்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் ஆறாம் திகதி விமல் வீரவன்ச வெளியிட்ட தேசத்துரோகிகள் பட்டியலில் சிவராமின் பெயரும் இடம்பெற்றிருந்தது. விமல் வீரவன்சவின் அந்தக் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முயற்சி தொடர்பாகப் பல தரப்பிலும் கலந்தாலோசனை இடம்பெற்று வந்ததோடு, அது தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட நகல் அறிக்கையின் பிரதியொன்று கொலையுண்ட சிவராமின் காற்சட்டைப் பையிலும் இருந்து பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சிவராமின் கொலையில் ஜே.வி.பி. நேரடியாகச் சம்பந்தப்பட்டிருக்காமல் இருக்கக்கூடுமானாலும், இந்தக் கொலையில் அவர்களுக்கும் குறிப்பிட்டதொரு அளவுக்குத் தொடர்பு இருந்திருக்கிறது. கொலை முயற்சித் திட்டமும், துப்பாக்கி வேட்டும் ஒரே தரப்பிலிருந்து அல்லாமல் இரு வெவ்வேறு தரப்புக்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆயினும், இவ்விரு செயற்பாடுகளுக்கும் இடையில் நெருங்கிய சம்பந்தம் இருந்திருக்கிறது.

ஜே.வி.பி. இன்று ஜனநாயக நடைமுறையில் இணைந்து கொண்டுள்ளபோதிலும் அவர்கள் ஆயுதந்தாங்கி அரசுக்கெதிராகப் போராடிய வேளையில், தம்மால் தேசத்துரோகிகள் எனக் கருதப்பட்டோரைக் கொலை செய்யும் நடைமுறையைக் கடைக்கொண்டிருந்தனர். தற்போது அவாக்ள் இவ்விதம் பகிரங்கமான மனிதப் படுகொலைகளில் ஈடுபடுவதில்லையாயினும், நாட்டின் குடிமக்களாகிய ஒரு சிலரைத் தேசத்துரோகிகள் எனக் குற்றஞ் சாட்டிப் பிரகடனம் செய்கின்றனர். அதன்மூலம், அவசியமாயின், தேசத்துரோகிகள் எனப்பிரகடனப் படுத்தப்படுபவர்களைப் பிறிதொரு தரப்பினர் கொலை செய்வதற்கான பின்னணியை ஜே.வி.பியினர் உருவாக்கிக் கொடுப்பதாகக் கருதமுடிகிறது என்று விக்ரர் ஐவன் எழுதுகிறார் என்று பரமசிவம் சொன்னார்.

சிவராம் கொலையில் கருணா தரப்புக்குச் சம்பந்தமிருக்க முடியாது என்று விக்ரர் ஐவன் கருதுகிறார். அவர் இது பற்றி பின்வருமாறு கூறியிருக்கிறார்.

கருணா தரப்பினர் தமக்கு எதிரானவர்களை அதிரடியாகத் தாக்கிக் கொலை செய்துவந்தபோதிலும், மிக நுட்பமான முறையில் கடத்திச் சென்று கொலை செய்த சம்பவங்கள் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. தலைநகர் கொழும்பில் இவ்விதம் திட்டமிட்டுக் கடத்திச் சென்று கொலை செய்யும் அளவுக்கு அவர்கள் பலம்பெற்றிருக்கவில்லை. சிவராம் கொழும்பில் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தின் அண்மையில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். எனவே இந்தக் கொலை கருணா தரப்பினாலன்றி மற்றொரு குழுவினாலேயே மேற்கொள்ளப்பட்டதென நம்பவேண்டியுள்ளது. உண்மையில் இந்தப் படுகொலையைப் புரிந்தவர்களை இனங்கண்டுபிடித்துச் சட்டத்தின்முன் நிறுத்த அரசினால் முடியுமா என்பதே கேள்விக்குரியது என்று விக்ரர் ஜவன் தமது கட்டுரையை முடிக்கிறார் என்று முடித்தார் பரமசிவம்.

*டி.பி.எஸ் ஜெயராஜும், விக்ரர் ஜவனும் இரண்டு கோணங்*களில் சிவராம் கொலையைக் காட்டியிருக்கிறார்கள். அரசின் புலனாய்வுப் பிரிவு என்ன கோணத்தைப் பார்க்கிறதோ? என்று சொல்லியபடியே எழுந்தார் பரமசிவம்.

நினைவுக் கட்டுரை

நெடுந்தீவு கண்ணன்

**குமுதினிப் படகு படுகொலையின் இருபதாவது ஆண்டு நினைவு நாளையொட்டி இந்தச் சோகமான நினைவுகள் மீண்டும் உங்களுடன் மன அலைகளில் சற்று மனங்கலங்கி....**


# ஆர்ப்பரிக்கும் கடலன்னை மடியதனில் அடங்கிவிட்ட உயிர்க் கதை





## உருண்டோடிய 20 வருடங்கள்

நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபட்டிருந்த வீதி அபிவிருத்தி அதிகார சபையினரது குமுதினிப் படகு, 1985ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 15ஆம் நாள் காலை வழமைபோல, நெடுந்தீவில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்லும் பயணிகளையும், சுமைகளையும் சுமந்து, நடக்கப்போவது எதுவுமே அறியாமல் வழமையான தாலாட்டுடன் சென்றவேளையில், வழிமறித்த படகொன்றில் இருந்து சாதாரண உடையணிந்த கடற்படையினர் - பயணிகள் அனைவரையும் படகின் முன் அறைக்குச் செல்லுமாறு பணித்து, அவர்களது பெயர்களை உரத்து உரைக்கும்படி கூறினார்கள்.



15·5·85ல் குமுதினிப் படகில
வெட்டப்பட்டு இறந்தவர்களின்
பெயர்கள்

| | |
|---|---|
| த. இராஜேஸ்வரன் | சி. தில்லைநாதன் |
| மு. மணிவண்ணன் | ப. நிர்மலாதேவி |
| த. அமிர்தலிங்கம் | தொ. நாகேந்திரன் |
| செ. சந்திரகுமார் | கு. விநாயகமூர்த்தி |
| சா. குசலகுமாரி | ஞா. மரியமாணிக்கம் |
| கு. கனகலிங்கம் | செ. கிறிஸ்ரினம்மா |
| அ. அந்தோனிப்பிள்ளை | ப. சொர்ணம்மா |
| ஞா. தேவசகாயம்பிள்ளை | வே. புஸ்பராணி |

| | | |
|---|---|---|
| [illegible]நந்தன் | கி. எலிசம்மா | வி. சுபாசினி |
| [illegible]நாயகம் | ஐ. தெய்வானை | த. சசிகலா |
| வே. [illegible]நைையா | ப. யோகராசா | ப. நிர்மலா |
| க. [illegible]தாசன் | வே. சின்னையா | அ. அருசியா |
| சி. அந்தோனி | வை. சதாசிவம் | [illegible]கனகம்மா |
| [illegible]முருகன் | ந. கந்தையா | ப. மரியம்மா |

க. கார்த்திகேசு    க. சதாசிவம்

## அரங்கேறிய அவலம்

தங்கள் பெயர்களை உரத்துக் கூறிய வண்ணம் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எல்லோரையும் மீண்டும் படகினது பின் அறைக்கு ஒவ்வொருவராகப் போகும்படி கட்டளையிட்ட போதும், எதுவும் அறியாது பின் அறைக்குச் சென்றவர்களைக் கூரிய ஆயுதங்கள், கத்திகள், கோடரிகள் கொண்டு வெட்டி இனவெறியாட்டம் ஆடி, பின் அறையிலே போட்டுக் குவித்தனர். இந்த வேளையில் ஏதுமறியா குமுதினியாள் கடல் நீரில் தத்தளிக்க, ஏதுமறியாத ஏதிலிகள் இரத்த வெள்ளத்தில் தத்தளித்த அவலம் இன்றும் எம் நினைவில்.

## குழந்தையும் மிஞ்சவில்லை

சொந்தத் தேவைகளுக்காகச் சென்ற பயணிகளில் எட்டுமாதக் குழந்தை முதல், 84 வயது நிரம்பிய முதியவர் வரை இருந்தனர். இவர்கள் எவருமே இவ் இன வெறித் தாண்டவத்தில் தப்பவில்லை. எட்டு மாதம் நிறைந்த பிஞ்சுக் குழந்தையின் மார்பிலே மூன்று கத்திக் குத்துகள் காணப்பட்டன. அந்தளவுக்கு தமிழினத்தை வேரோடு கிள்ளும் முயற்சி அன்றே குமுதினிப் படகில் முளைவிட்டதென்றே கூற வேண்டும்.

## வரலாற்றில் முதன் நிலை

தமிழீழ போராட்ட வரலாற்றிலே இந்தப் படுகொலை நிகழ்வானது மறைக்க, மறுக்க முடியாததொரு தடம்பதித்துள்ளது. அன்று அதில் பயணித்தவர்கள் ஒவ்வொருவரும் தமிழீழ போராட்டத்துக்கு ஒரு விதையாக இருந்தார்கள் என்பதும் உண்மை. கடல் நடுவிலே தத்தளிக்கும் படகில் வைத்து இவ்வாறானதொரு கோரத் தாண்டவம் ஆடியதும் இதுவே முதன்முறை.

## முடிவுறா விசாரணை

இந்தப் படகில் பயணித்து வெட்டப்பட்டவர்களில் பலர் இன்று காயங்களுடனும், வடுக்களுடனும் நடமாடுகின்றனர். இந்தக் கோரச் சம்பவம் தொடர்பாக- உயிர் பிழைத்தவர்களது வாக்கு மூலங்கள் பெறப்பட்ட வேளையிலே அவர்கள் ஒவ்வொருவரும் தெட்டத் தெளிவாக இந்தப் படுகொலை நிகழ்வைச் செய்தவர்கள் கடற்படையினர்தான் எனவும், அவர்களை அடையாளம் காட்டவும் முடியும் எனவும் கூறிய போதும், எந்த வித சட்டநட வடிக்கையும் இன்று வரை எடுக்கப்படவில்லை. அத்தோடு இந்தப் படுகொலையானது - திட்டமிட்டுச் செய்யப்பட்டதொன்று எனவும், மரண விசாரணைகள் மூலமும் அன்றே கூறியுள்ளனர். எல்லா விதமான விசாரணைகளும் காகிதங்களுடன் முடிந்துவிட்டன.

## போராளிகள் இணைவு

குமுதினிப் படகுப் பயணிகள் மிகவும் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட பின்னர், சிங்கள அரசினதும், படைகளினதும் கொடும் நிலை கண்டு, அதனை நிறுத்தி, முடிவு கட்டவேண்டும் என்ற எண்ணமும், உணர்வும் மேலோங்கி பெருமளவு இளைஞர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைய முன் வந்தனர். படுகொலை நிகழ்வுமூலம் தமிழர்களது உணர்வுகளை, மழுங்கடித்துவிடலாம் என்று எண்ணிய இனவாத சக்திகளது எண்ணங்கள் தவிடுபொடியாகும் வகையிலே, அவர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து, தமக்கென ஒரு சுதந்திர வாழ்வைப் பெறுவதற்கு மக்கள் அணி திரண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## நினைவாலயம்

படுகொலை செய்யப்பட்ட 36 உறவுகளது ஞாபகார்த்தமாக நெடுந்தீவு மாவிலித்துறை முகப் பகுதியில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபியும், நினைவு மண்டபமும் அமைந்துள்ள வளாகம் இப்போது கடற்படையினரது மினி முகாமாக உள்ளது. இந்த நினைவாலயப் பகுதியிலே ஆயுதங்களுடன், பாதணிகளுடன் நடமாடுவதும், மதுவகைகளை இதில் வைத்துப் பயன்படுத்துவதும் என, பலதரப்பட்ட மக்களுக்கு ஆத்திரமூட்டும் செயற்பாடுகள் வழமையாக இடம் பெறுகிறது. நினைவு தினத்தன்று மட்டும் இதனைவிட்டு வெளியேறும் கடற்படையினர் மீண்டும் குடி கொண்டுவிடுவர். மரியாதைக்கும், வழிபாட்டுக்கும் உரிய இந்தப் பகுதி - இன்று கடற்படையினரின் கூடாரமாக மாறிக் காணப்படுகிறது.

## நினைவழியா மாந்தர்கள்

இன்றுடன் இருபது வருடங்கள் சோகமான நினைவுடன் உருண்டோடிவிட்டபோதும், தமிழீழ வரலாற்றுக்காலம் எப்போதும் படுகொலை செய்யப்பட்ட மக்களது நினைவுகள் அழியாது. 1985ஆம் ஆண்டுமுதல் இன்றுவரை நெடுந்தீவு மக்கள் மட்டுமன்றி, தமிழ்ப் பகுதி மக்கள் அனைவரும் இந்த நினைவு நாளைப் புனிதமாக, பூசிக்கப்படுவதற்கான நாளாகக் கருதி அனுஷ்டித்து வருகின்றமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. அத்துடன் எங்களது மனங்களில் இருந்து நினைவுகள் அழியாத வகையிலே, இனவிரோத சக்திகளின் வரலாற்றுப் படுகொலை நினைவுகளுடன் இன்றும் ''குமுதினி''ப் படகுப் பயணிகளையும், சுமைகளையும், தனது 20 வருடகால சுமையையும் சுமந்து, ஒரு தாய்க்குரிய பொறுமையும், பெயருக்கேற்ப அலைகடலில் தவழ்கின்றாள்.

''சித்திரத் தோணியின் மடியிலே
எத்தனை உயிர்கள் மடிந்தன
அத்தனையும் மறக்க முடியுமா''?...
அந்த உயிர்கள் போனகதை
நினைவுநாள் என்றுமே அழியாது.

## உதிரத்தீ மேரர்

குருதி தோய்ந்த குமுதினியாள்
குமுறும் கடலில் தனியாக
வருவாள் என்றன்றெவர் சொன்னார்
வந்தாள் எங்கள் உணர்வூக்க

பேரினவாதப் பேரிடியாய்ப்
பேசும் கொலைஞர் பேய் நிசமாய்
ஆரிவர் கொடியோர் ஆள்பவரா?
அரசா? மக்கள் காவலரா?

எத்தனை பெண்கள், சிறுபிள்ளை,
எளியோர் மக்கள், வயோதிபர்கள்
அத்தனை பேரும் பலியானார்
அரக்கர் செயலால் பிணமானார்.

புத்தர் தந்த தத்துவங்கள்
புரட்டும், திருட்டும் ஆய்விடுமோ
பித்தர் செய்த பேய்ச்செயலால்
பெருகிற் றுறுதிப் போராட்டம்.

-நெடுந்தீவு மகேஷ்-




## கடலம்மா

கடலம்மா நீயே சொல்
குமுதினி ஏன் பிந்தி வந்தாள்?
எம்மவரின் அவலங்களைச்
சடலங்களாய்ச் சுமந்து கொண்டு
குமுதினி குருதி வடிய வந்தாள்
கடலம்மா கண்டாயோ.
கார்த்திகேசு என்னவானான்
எந்தக் கடலில் உடலூதிக் கிடந்தானோ
ஓ... சோழகக்காற்றே நீ
வளம்மாறி வீசியிருந்தால்
குமுதினி வரமாட்டாள்
என்று நெடுந்தீவுக்குச்
சொல்லியிருப்பாய்
பாவம்
மரணங்களின் செய்திகூடக்
கிட்டாத தொலைவில்

ஏக்கங்களையும், துக்கங்களையும்
கடலலைகளிடம் சொல்லிவிட்டுக்
காத்திருக்கும் மக்கள்
கடலம்மா நீ மடி
ஏனந்தத் தீவுகளை
அநாதரவாய்த் தனியே விட்டாய்
கடலம்மா
உன் நீள் பரப்பில்
அநாதரவாய் மரணித்த எம்மவரை
புதிய கல்லறைகளை எழுப்பி
''அனாதைக் கல்லறைகள்''
என நினைவூட்டு. ஆனால்
இனிவரும் கல்லறைகள்
வெறும் இறப்புக்களின்
நினைவல்ல, எமது
இலட்சியங்களின் நினைவாகட்டும்

-நிலாந்தன்-


# உஸ்பெகிஸ்தானில் சிறையுடைப்பு பாரிய வன்செயலாக மாறியுள்ளது!

## படையினர் சூட்டில் பலர் பலி


**சோவியத் ரஷ்யாவிலிருந்து பிரிந்து சென்ற உஸ்பெகிஸ்தானில் அரசுக்கெதிராக போராடிவரும் கிளர்ச்சிவாதிகள், கடந்த வெள்ளிக்கிழமை அன்டிஜான் நகரிலுள்ள சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த ஆயிரம் பேரை மீட்டதுடன், பத்துப் பொலிஸாரையும் பணயக் கைதிகளாகப் பிடித்துச் சென்றுள்ளனர். அத்துடன் அரசாங்க கட்டடம் ஒன்றைக் கைப்பற்றி, அதில் தங்கள் தலைமையகத்தையும் அமைத்தனர்.**



இதனையடுத்து அங்கு ஏற்பட்டுள்ள வன்செயல்களை அரசாங்கம் கட்டுப்படுத்த முடியாமல் திணறி வருகின்றது. இந்த நிலையில் இந்த வன்செயல்களுக்கு இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகளே காரணமென உஸ்பெகிஸ்தான் ஜனாதிபதி இஸ்லாம் கரிமூவ் குற்றஞ்சாட்டியுள்ளார். அத்துடன் இந்த வன்செயல்களில் 30 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், அவர்களில் பத்துப் பேர் குற்றவாளிகள் எனவும் தெரிவித்தார்.



ஆனால் எவ்வித ஆயுதங்களையும் வைத்திராத பொதுமக்கள் மீது இராணுவத்தினர்



துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். அத்துடன் 200 சடலங்கள் வீதிகளில் கிடந்ததைத் தாம் கண்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை கிளர்ச்வாதிகள் வைத்திருந்த அரசாங்க கட்டடத்தை மீளவும் படையினர் தம் கட்டுப்பாட்டுக்குள் நேற்று கொண்டுவந்துள்ளதாக உஸ்பெகிஸ்தான் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எனினும், அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. இந்த ஆர்பாட்டத்தில் ஈடுபடுபவர்கள் உஸ்பெகிஸ்தான் ஜனாதிபதி உடனடியாகப் பதவி விலகவேண்டுமெனக்



கோஷங்களை எழுப்பிவருகின்றனர்.

கிளர்ச்சிவாதிகளின் பிடியிலிருந்து மீட்கப்பட்ட அரசாங்க கட்டடத்தைச் சுற்றிவர படையினர் பெருமளவில் நிறுத்தப்பட்டுள்ளனர். இந்தப் பகுதிகளில் தேடுதல், மற்றும் சுற்றிவளைப்புக்களில் ஈடுபடும் வகையில், அங்கிருந்த தம்மை படையினர் பலவந்தமாக வெளியேற்றியதாக செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

இந்த வன்செயல்களைக் கட்டுப்படுத்தி அமைதியை ஏற்படுத்துமாறு அமெரிக்கா கேட்டுக்கொள்வதாக வெள்ளை மாளிகைப் பேச்சாளர் ஸ்கொட் மைக்கில்லன் தெரிவித்துள்ளார்.

உஸ்பெகிஸ்தான் அதிகாரிகள் மனித உரிமைகளைப் பேணி, சட்டம் ஒழுங்கை நிலை நாட்டி, வறுமையை ஒழிக்கும் நடவடிக்கைகளுக்கு போதுமான அளவில் செயற்படவில்லையென ஐரோப்பிய ஒன்றியம் விமர்சித்துள்ளது.

# மிகப் பழமையான பாதணி இங்கிலாந்தில் கண்டெடுப்பு!

2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய உலோக காலத்தைச் சேர்ந்த பழமையான பாதணி ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

30 சென்ரிமீற்றர் நீளம் உள்ள தோலினால் ஆன இந்தப் பாதணி, தெற்கு இங்கிலாந்தில் ஒரு மரப்பொந்தில் இருந்து கண்டெடுக்கப்பட்டது.

தொல்பொருள் இலாகா அதிகாரி ரிச்சர்ட் வுட் கேட், இதுதான் பழமையானது. நன்கு பராமரிக்கப்பட்டுள்ளது. கயிறு போட்டுக் கட்டுவதற்காக துளைகள் உள்ளன என்று கூறினார்.

இந்தப் பாதணி எக்ஸ்டெர் நகரில் உள்ள அல்பேட் நினைவு அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும். என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பாதணி இருந்த மரம் கி.மு. 1460 முதல் 1290 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்ததெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெண்களைக் கொன்ற நபருக்கு விஷ ஊசி ஏற்றி மரண தண்டனை

அமெரிக்காவில் கனெக்டிகட் சிறையில் 8 பெண்களைக் கொன்றமைக்காக மைக்கேல் ராஸ் என்பவருக்கு விஷ ஊசி போட்டு மரண தண் டனை நிறைவேற்றப்பட்டது. நேற்று முன்தினம் நள்ளிரவு 2 மணிக்கு விஷ ஊசி போடப்பட்டது. அது அவரை மயங்கச்செய்து, தசைகளை செயல் இழக்கச் செய்து, இதயத்துடிப்பை நிறுத்தியது. 2.25 மணிக்கு அவர் இறந்ததாக சிறை அதிகாரி அறிவித்தார்.

மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன்பு கடைசியாக அளிக்கப்பட்ட விருந்தில் பழம், பழரசம் ஆகியவை மைக்கல் ராஸ்க்கிற்கு வழங்கப்பட்டது. மரண தண்டனை விதிக்கப்பட்டதும் இதற்கு எதிராக மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

கனெக்டிகட் உள்ள நியூ இங்கிலாந்து மாநிலத்தில் 45 ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போதுதான் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# லஞ்சம் வாங்கி சொத்துக்களை சேர்த்த இரு நீதிபதிகள், ஆளுநர் பணி நீக்கம்!

## நைஜீரிய ஜனாதிபதி நடவடிக்கை

(நைஜீரியா)

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான நைஜீரியாவில் லஞ்ச ஊழல் தலை விரித்தாடுகிறது. லஞ்ச ஊழல் அதிகம் நடைபெறும் நாடுகள் பட்டியலில் இந்த நாடு முதலிடத்தைப் பிடித்திருந்தது.

இதையடுத்து லஞ்ச ஊழலை ஒழித்துக்கட்ட நைஜீரிய அதிபர் ஒப சாஞ்சோ கடும் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

லஞ்சம் வாங்கும் அதிகாரிகளைக் கண்காணிக்கும் குழுவை அவர் அமைத்தார். இந்தக் குழு விசாரணை நடத்தி அவ்வப்போது லஞ்ச ஊழல் அதிகாரிகள் பட்டியலைக் கொடுத்து வருகிறது.

இதனடிப்படையில் ஏற்கனவே 2 அமைச்சர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

தற்போது 2 உச்ச நீதிமன்ற நீதிபதிகளும் ஊழல் விவகாரத்தில் சிக்கியுள்ளனர். லஞ்ச ஊழலில் ஈடுபட்ட நீதிபதிகள் ஒகிசுங்கு, அடினிஜி ஆகியோர் கோடிக் கணக்கில் சொத்து சேர்த்திருப்பது தெரியவந்தது.

வெளிநாட்டு வங்கிகளிலும் இவர்களுக்கு கோடிக்கணக்கில் பணம் இருந்தது. இதனையடுத்து அந்த இரண்டு நீதிபதிகளையும் அதிபர் ஒபசாஞ்சோ பணி நீக்கம் செய்தார். இதே வேளை, பிளேட்டோ மாகாண ஆளுநர் ஜோசுவா தரியி பண மோசடியில் ஈடுபட்டது தெரிய வந்ததால் அவரும் பணி நீக்கம் செய்யப்பட்டார்.

# வத்திக்கான் கர்தினாலுக்கு 10 நாள் சிறைத் தண்டனை!

ரோம் நகரை ஒட்டியுள்ள பகுதியில் அனேகமானோருக்கு புற்றுநோய் பாதிப்பு ஏற்பட்டது. பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. வத்திக்கான் நகர வானொலி நிலையத்தில் சக்தி வாய்ந்த ஒளி பரப்பு அன்ரனாவில் இருந்து மின்காந்த அலை அளவுக்கு அதிகமாக வெளியிடப்பட்டதால் இது ஏற்பட்டதாக விஞ்ஞானிகள் ஆய்வில் தெரிவித்தனர்.

இதையொட்டி வத்திக்கான் நகர கர்தினால் ரொபர்ட்டோ ரூசி, வானொலி நிலைய பொறுப்பாளராக இருந்த பாஸ்குவேல் போர்கோமியோ ஆகியோர் மீது வழக்குத் தொடரப்பட்டது. சூழலை பாதிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதால், இருவருக்கும் 10 நாள் சிறைத்தண்டனை விதித்த நீதிமன்றம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு மற்றும் நீதிமன்ற செலவை இருவரும் ஏற்கவேண்டுமென்று தீர்ப்புக் கூறியது.

# சுமாத்ரா தீவில் மீண்டும் நேற்று பாரிய பூமியதிர்வு!

இந்தோனேஷிய - சுமாத்ரா தீவில் கடலுக்கடியில் 6.9 ரிக்டர் அளவில் பூமியதிர்வு ஏற்பட்டபோதிலும், எவ்வித உயிரிழப்புக்களோ மற்றும் சேதங்களோ ஏற்படவில்லையென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பூமியதிர்வு ஏற்பட்ட போதிலும் சுனாமி ஏற்படுவதற்கான வாய்ப்பில்லையென இந்தோனேஷிய வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. ஏனெனில், இந்தப் பூமியதிர்வு ஏற்பட்ட இடத்திலிருந்து, தரைப்பகுதி தூரமாக உள்ளதே இதற்குக் காரணமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பூமியதிர்வு தகவலையடுத்து, பெருமளவான மக்கள் வீடுகளிலிருந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர். எனினும் எவரும் இந்த நெரிசலில் காயமடையவில்லை.

இந்தப் பூமியதிர்வினால் ஏற்பட்ட அழிவு இந்தோனேஷியாவின் பதாங் மற்றும் றியாஸ் பகுதிகளில் பலமான தாக்கத்தை ஏற்படுத்திய போதிலும், இதனாலேற்பட்ட சேத விபரம் குறித்த தகவல் எதுவும் தெரியவரவில்லை.

கடந்த மார்ச் மாதம் 8.7 ரிக்டர் அளவில் றியாஸ் தீவில் ஏற்பட்ட பூமியதிர்வினால் பலர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## முஷாரப்புக்கு எதிராக செயற்பட கூடாதென

# பெனாசிர், நவாப் ஷெரீப்பிற்கு அமெரிக்கா கடும் அழுத்தம்!



(காபூல்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ தற்போது லண்டன் மற்றும் துபாயில் மாறிமாறி தங்கியுள்ளார்.

ஊழல் வழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட பெனாசிர் நாடு திரும்பினால், அவரை பாகிஸ்தான் அரசு உடனடியாக கைது செய்யும். பெனாசிர் வெளிநாட்டிலிருந்துகொண்டே பாகிஸ்தானிலுள்ள தனது கட்சித் தொண்டர்களை அதிபர் முஷாரப்பிற்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபடுத்தி வருகிறார்.

இதேபோல் முன்னாள் பிரதமர் நவாப் ஷெரீப்பும் நாடு கடத்தப்பட்டு தற்போது சவூதி அரேபியாவில் வாழ்ந்து வருகிறார். அவரது முஸ்லிம் லீக் கட்சியும் முஷாரப்பிற்கு எதிராக போராட்டம் நடத்தி வருகிறது.

இந்த நிலையில் பெனாசிர் மற்றும் நவாப் ஷெரீப்பை அரசியலுக்கு முழுக்கு போடும்படி அமெரிக்கா வற்புறுத்தி வருகிறது. முஷாரப்புக்கு எதிராக போராட்டங்களைத் தீவிரப்படுத்த வேண்டாம் என்றும் அவர்களை அமெரிக்கா எச்சரித்துள்ளது.

முஷாரப்பிற்கு ஆதரவாக அமெரிக்கா செயற்பட்டு வருவது இந்த இரு கட்சிகளுக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளது. முஷாரப்பின் ஏற்பாட்டின் பேரில்தான் அமெரிக்கா இப்படி நடந்து கொள்வதாகவும் அந்தக் கட்சிகள் கூறியுள்ளன.

# பாகிஸ்தானில் செய்தியாளர் துப்பாக்கிச் சூட்டில் காயம்!

பாகிஸ்தானிலுள்ள, ஆப்கான் எல்லைப் பகுதியில் இனந்தெரியாத ஆயுதபாணிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் செய்தியாளர் ஒருவர் காயமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானின் வசிறிஸ்தான் பகுதியில், வாகனமொன்றில் சென்று கொண்டிருந்த ஆயுதபாணிகள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டபோது, றொய்ட்டர் செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த முஜிபுர் ரகுமான் என்ற செய்தியாளரே காயமடைந்தவராவார்.

இந்தத் தாக்குதலை யார் நடத்தியது என்பது தொடர்பாக எதுவும் தெரியவரவில்லை.

கடந்த பெப்ரவரி மாதமும் இதே பகுதியில் வாகனத்தில் சென்ற இரண்டு செய்தியாளர்கள் கொல்லப்பட்டதுடன், மற்றொருவர் படுகாயமடைந்தார்.

வசிறிஸ்தான் மாகாணத்தில் செய்தியாளர்கள் தாக்கப்படுவது குறித்து சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு மற்றும் மீடியா வோச்டோக்ஸ் ஆகியன ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளன.

இந்தப் பகுதியில் கிளர்ச்சிவாதிகளுக்கெதிரான படை நடவடிக்கைக்கு பாகிஸ்தான் சுமார் 70 ஆயிரம் படையினரை நிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# விமானப்படையை பலப்படுத்த விடுதலைப்புலிகள் நடவடிக்கை

## கொழும்பு ஊடகம் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் தமது வான் படையை மறுசீரமைத்து மேலும் பலம் வாய்ந்ததாக்குவதற்கென இரண்டு முக்கிய உறுப்பினர்களை நியமித்துள்ளதாகக் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் வான் படையை பலம் பொருந்திய ஒரு படையாக மாற்றுவதற்காக விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன், கென்னடி மற்றும் கடாபி ஆகிய இரு உறுப்பினர்களிடம் அதற்கான பொறுப்புக்களை வழங்கியிருப்பதாக இராணுவ உளவுப்பிரிவுக்குத் தகவல்கள் கிடைத்திருப்பதாக அந்த ஊடகம் செய்தி வெளியிட்டிருக்கிறது.

முல்லைத்தீவில் அமைக்கப்பட்டுள்ள விமான ஓடுபாதையை மேலும் விரிவாக்குதல், கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசத்தில் சிறிய அளவிலான விமான ஓடுபாதையொன்றை அமைத்தல், இயன்றளவு ஹெலிகொப்டர்கள், இலகுரக விமானங்களை கொள்வனவு செய்தல், அரசாங்கத்தின் விமானப்படைத் தாக்குதல்களுக்கு முகம்கொடுக்கக்கூடியவகையில் சக்திமிக்க எதிர்த்தாக்குதல் நடத்தக்கூடிய பிரிவொன்றை ஏற்படுத்தல், விமான ஓட்டிகள் மற்றும் விமானப் படையின் பல்வேறு செயற்பாடுகளுக்கு உரிய வீரர்களைத் தெரிவு செய்து அவர்களுக்குப் பயிற்சியளித்தல் ஆகியனவே இவ்விரு உறுப்பினர்களிடமும் கையளிக்கப்பட்டிருக்கும் பொறுப்புக்களாகும்.

தலைவர் பிரபாகரனின் தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரியாக கடமையாற்றி வந்த கென்னடி விமானப் படையின் புதிய பொறுப்பாளராகவும், கடாபி துணைப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்டிருப்பது தொடர்பாகவும் விடுதலைப்புலிகளின் விமானப் படை தொடர்பாகவும் பாதுகாப்பு அமைச்சிற்கு அறிவித்திருப்பதாக இராணுவப் புலனாய்வுப்பிரிவு முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்ததாகவும் இந்த ஊடகம் மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

## யாழ். இளைஞர் கொழும்பில் கைது!

(கொழும்பு)

கொழும்பில் இலங்கை விமானப் படை விடுதிக்கு முன்பாக சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாகத் தெரிவித்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் விமானப்படையினரால் கைதுசெய்யப்பட்டார்.

கடந்த வியாழக்கிழமை மாலை கைதுசெய்யப்பட்ட இவர் - யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பீற்றர் விமல் சந்திரசேகரம் எனவும் - இவர் தற்போது கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாப்பரசர் அனுதாபம்!

இலங்கையில் சுனாமி அனர்த்தத்தாலும் யுத்தத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புதிய பாப்பரசர் பதினாறாவது பெனடிக்ற் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார்.

புதிய பாப்பரசரை இலங்கையைச் சேர்ந்த பதினாறு ஆயர்கள் சந்தித்தபோதே அவர் தனது அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார்.

### தகவல்.....

ருக்குத் தகவல் கொடுப்பவர் என்று விசாரணைகளிலிருந்து தெரியவந்திருப்பதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கண்டி...

ஆகியோருக்கு சிறப்பு அழைப்பிதழ் விடுவிக்கப்பட்டதனால், அவர்களும் கலந்து கொள்கின்றனர்.

இதேவேளை உலகவங்கி மற்றும் உதவி வழங்கும் நாடுகளை கடுமையாக விமர்சித்து வந்ததுடன் அறிக்கைகளையும் வெளியிட்டு வந்த ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேன விஜயசிங்க நாளை கண்டி மகாவலி றிச் ஹொட்டலில் நடைபெறும் உதவிவழங்கும் மாநாட்டின் இரண்டாவது அமர்வின் ஒரு பிரிவிற்கு தலைமை தாங்கவுள்ளதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (தே)

# பொதுக்கட்டமைப்பு ஏற்படாவிடின்...

கொழும்பு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் தொடர்ச்சியாக கொலைகள் நடைபெற்று வருகின்றன. நாம் எந்தத் தரப்பையும் குற்றம் சொல்ல விரும்பவில்லை. ஆனால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் முறையாக செயற்படுத்த வேண்டும் என்பதே எங்களது கவலை.

அரசியல் தலைவர்கள் தங்களது பாதுகாப்புகளை முன்னைவிட பலப்படுத்த வேண்டிய நிலை இருக்கிறது. பல்வேறு குழுக்களிடையே உள்ள அவநம்பிக்கைகள் அதிகரித்துள்ளதால் படுகொலைகள் அதிகரித்து வருகின்றன.

பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதில் ஜனாதிபதி சந்திரிகாவின் நிலையை பாராட்டுகிறோம். விரைவில் பொதுக்கட்டமைப்புக்கு அவர் இறுதி வடிவம் அளிப்பார். பொதுக் கட்டமைப்பு தொடர்பாக சந்தேகங்களையும், அச்சங்களையும் எழுப்புகிறவர்களுடன் உரிய முறையில் பேசி இணக்கமான தீர்வை ஜனாதிபதி சந்திரிகா ஏற்படுத்துவார் என்று நாம் நம்புகிறோம்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்களைச் சந்தித்து பேசியபோது சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவும் வகையில் விரைவில் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படும் என்ற நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் இருக்கிறது.

இருந்த போதும் பொதுக்கட்டமைப்பை இலங்கை அரசு உருவாக்காவிட்டாலும் மாற்று ஒழுங்கமைவு ஒன்றை உதவிவழங்கும் நாடுகள் மேற்கொள்ளும்.

கண்டியில் நடைபெறுகிற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் தமது தரப்பையும் அழைக்கவில்லை என்று விடுதலைப்புலிகள் தெரிவித்தனர். யார் அழைக்கப்படவேண்டும் என்பது இலங்கை அரசின் முடிவு. ஆனாலும் புலிகளை அந்த மாநாட்டிற்கு அழைப்பதற்கான உரியகாரணங்கள் உள்ளன.

இருந்தபோதும் அரசின் முடிவுகளை நாங்கள் மதிக்கிறோம். ஜப்பான் மற்றும் இதரஉதவிவழங்கும் நாடுகள் இலங்கையின் உள் அரசியல் விவகாரங்களில் ஒருபோதும் தலையிடாது என்றும் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

முடங்கிப்போயிருக்கும் சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வதற்கு பொதுக் கட்டமைப்பு ஒரு உந்துசக்தியாக இருக்கும் என்று ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி தெரிவித்தார்.

கிளிநொச்சியில் தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்று சந்தித்த பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் -

அமைதி முயற்சிகள் மற்றும் பொதுக்கட்டமைப்புக் குறித்து இந்தச் சந்திப்பில் தமிழ்ச்செல்வனுடன் ஆலோசனை நடத்தினோம்.

கண்டியில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் குறித்தும் விவாதித்தோம். தற்போதைய சமாதான சூழல், அரசியல் படுகொலைகள், யுத்தநிறுத்த மீறல் ஆகியவை குறித்தும் தமிழ்ச்செல்வன் விளக்கினார்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை செயற்படுத்துவதில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகள் குறித்தும் தமிழ்ச்செல்வன் எடுத்துக்கூறினார்.

சுனாமி மீளமைப்பிற்கான பொதுக் கட்டமைப்பு மிகவும் பயனுள்ளது. முடங்கி நிற்கும் அமைதி முயற்சிகளுக்கு அது உந்துசக்தியாக இருக்கும்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான கூடுதல் விபரங்கள் குறித்து அரசாங்கத்தரப்புடன் பேசவுள்ளோம். தற்போது இலங்கை அரசாங்கம் பொதுக் கட்டமைப்பை உருவாக்க முன்வந்துள்ளது. ஆனால், ஜே.வி.பி. உள்ளிட்ட சிலர் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக சில கேள்விகளை எழுப்பியிருக்கிறார்கள்.

அவர்களுடனான சந்திப்பின்போது பொதுக்கட்டமைப்பின் அவசியம் குறித்து உரிய விளக்கம் அளிக்கப்படும். அவர்களும் பொதுக்கட்டமைப்பை ஏற்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது என அகாஷி மேலும் தெரிவித்தார்.

### செங்கலடி....

உயிரிழந்தவர் மட்டக்களப்பு - இலுப்பையடிச்சேனையைச் சேர்ந்த பொன்னம்பலம் தமிழ்வாணன் என இனங்காணப்பட்டுள்ளார்.

ஒரு பிள்ளையின் தந்தையான இவர், புலிகள் அமைப்பிலிருந்து விலகியவர் என அவரது தாயார் விசாரணையின்போது தெரிவித்தார்.

24 மணிநேரத்துக்குள் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற இரண்டாவது படுகொலைச் சம்பவம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

### பொதுக்கட்டமைப்பு..

நாடுகளின் கூட்டம் நாளையும் நாளை மறுதினமும் கண்டியில் இடம்பெறவுள்ளது. இதற்கு முன்னர் விடுதலைப் புலிகளுக்கு பொதுக்கட்டமைப்பை அமைத்துக்கொடுக்கும் சதிமுயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது.

அரசின் இந்த சதிமுயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே தேசிய பிக்குகள் முன்னணி இன்று சத்தியாக்கிரகத்தில் ஈடுபடவுள்ளது என்று தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# அரசாங்க - படைத்தரப்புப் போக்குகள்...

விளங்குகிறது. அத்துடன், சமாதான முன்னெடுப்புக்களுக்கும் தமது பங்களிப்பைச் செலுத்துவதால் இங்குள்ள நெருக்கடி நிலைமைகளைத் தெளிவுபடுத்தியுள்ளோம்.

முக்கியமாக தற்போது யுத்தநிறுத்த சூழல் நெருக்கடிக்குள் உள்ளாக்கப்பட்டு ஒரு நெருக்கடியான நிலை உருவாகியுள்ளமை தொடர்பாகத்தான் ஜப்பானிய சிறப்புத் தூதுவருக்கு விளக்கினோம். எங்கள் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள இராணுவ நெருக்குவாரங்கள், படுகொலைகள், படுகொலை முயற்சிகள் போன்றவை நிறுத்தப்பட்டு மக்களுக்கு யுத்தநிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டதுபோல் மீள்குடியமர்வுக்கும் இயல்புவாழ்விற்கும் திரும்புவதற்கான சூழலை விரைந்து ஏற்படுத்தாவிட்டால் மக்கள் ஒரு கொந்தளிப்பான சூழ்நிலைக்குத் தள்ளப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

ஏனெனில், அண்மையில் அமைதி வழியில் - ஜனநாயக வழியில் மக்கள் தமது எதிர்ப்புக்களைக் காட்ட முனைந்தபோது - படைத்தரப்பு வன்முறையை மக்கள் மீது பிரயோகித்து, எங்கள் மக்கள் கொல்லப்பட்டதும் காயமடைந்ததும் மூத்த பத்திரிகையாளர்கள், மூத்த அறிஞர்கள், பொதுமக்கள் கொல்லப்படுகின்ற நிகழ்வும் நேற்றும் (நேற்றுமுன்தினம்) தென் தமிழீழத்தில் ஆயுதக்குழுக்களால் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வு என்பவற்றையும் அகாஷிக்கு சுட்டிக்காட்டியுள்ளோம்.

இவையெல்லாம் படைத்தரப்போடு இணைந்து இயங்கும் ஆயுதக்குழுக்களின் செயலென்பது வெளிப்பட்டுள்ளது. ஆகவே, வடக்கு - கிழக்கில் ஆயுதக்குழுக்கள் செயற்பட அனுமதிப்பதில்லை என்பதும் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு வடக்கு - கிழக்கில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்பதும் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் முழு அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறை.

இவற்றை மீறி படைத்தரப்பு நிழல் யுத்தத்தை மக்கள் மீது திணித்து வருகிறது. அவற்றைவிட யுத்தநெருக்கடி நிலைக்குத் தள்ளிவிடும் சூழலை உருவாக்கி பழையபடி நிலைமைகளை மோசமாக்கும் வகையில் அரசு செயற்பட்டு வருவதையும் அவருக்குத் தெளிவாக்கியுள்ளோம்.

இவற்றில் சர்வதேச சமூகம் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் - நிலைமைகளைச் சீராக்க வேண்டும் என்றால் படைத்தரப்பும் அரசாங்கமும் தம்மை மாற்றிக்கொள்ளாவிட்டால் நிலைமை மோசமடையும் என்பதைத்தான் இந்தச் சந்திப்பில் விளக்கியுள்ளோம்.

நிலைமைகளைப் புரிந்துகொள்வதாகவும் முடிந்தளவு இலங்கை அரசாங்கத்துக்கு எடுத்துவிளக்குவதாகவும் முடிந்தளவு அழுத்தத்தைப் பிரயோகிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

முக்கியமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்று பாரிய நெருக்கடிகளைச் சந்தித்து நிற்கிறார்கள் அவர்களுக்கு உதவ எடுத்த முயற்சிகள் எல்லாம் கடந்த மூன்று ஆண்டுகளாக தோல்வியடைந்துள்ளன என்பதைச் சுட்டிக்காட்டினோம்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக்கூட நான்கு மாதங்களுக்கு மேலாக சர்வதேசத்தின் மனிதாபிமான உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையை அரசு உருவாக்கியுள்ளது.

தற்போது ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திடுவதாகவும் விரைவில் பொதுக்கட்டமைப்பைக் கொண்டுவருவதாகவும் அறிவிப்புக்களை விடுவது சர்வதேச உதவிகளைக் கவர்ந்திழுக்கும் நோக்கோடு அமைந்த யுக்தியே தவிர மக்களுக்கு இது நன்மை அளிப்பதாகத் தெரியவில்லை என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

அத்தோடு - பொதுக்கட்டமைப்பு கொண்டுவந்தால்கூட மக்களுக்கு நன்மை அளிக்கின்ற வகையிலான சூழலை அரசு உருவாக்குமா என்பது கேள்விக்குறியாக உள்ளது என்பதையும் சுட்டிக்காட்டினோம்.

பொதுக்கட்டமைப்பை பொறுத்தவரை எமது தரப்பில் எந்தவித பிரச்சினையுமில்லை. நோர்வே தரப்புத் தந்த யோசனையை எமது தலைமைப்பீடம் ஏற்கனவே ஏற்றுக்கொண்டுவிட்டது. ஆனால், ஜனாதிபதியோ, அரசாங்கமோ இதை இழுத்தடித்து தெற்கில் பெரும் எதிர்ப்பிருப்பதான தோற்றப்பாட்டை உருவாக்கி பெரிதுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

எங்களைப் பொறுத்தவரை இது ஒரு பெரிய விடயமல்ல. எமது மக்களுக்கு மனிதாபிமான உதவியைப் பெறுவதற்கான ஒரு கட்டமைப்பு அவ்வளவுதான். இதுதான் எமது மக்களின் பிரச்சினையல்ல. இது அண்மைக் காலத்தில் இடம்பெற்றது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை அரசாங்கம் வழங்காமல் நான்கு ஐந்து மாதங்களாக இழுத்தடிப்புச் செய்துவிட்டு, அறிக்கைகள் விடுவதில் எந்தவித பயனுமில்லை.

இந்நிலையில் சர்வதேச சமூகம் விரைந்து தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும் என்பதைத்தான் இந்தச் சந்திப்பில் தெளிவுபடுத்தினோம் என தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார்.

(பபு றெக்ஸ்)
இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட சுடிதார் துணிவகைகள், சுடிதார் வகைகள், கவுஸ்கோட் துணி வகைகள், லேடீஸ் கவுன், ரீ சேட், ஸ்கேட், பிளவுஸ், கிப்ட் வகைகள், ஒரிபிலேம் கிறீம் வகைகள் அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
பபு கொமினிகேசன்
(பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கு அருகில்)
இல: 30, வளாகவீதி,
திருநெல்வேலி.

## மரணஅறிவித்தல்

### அமரர்

### திருமதி கார்த்திகேசு திருமகள்

யாழ்.பல்கலைக்கழக புவியியற் துறைத்தலைவர் பேராசிரியர் க.குகபாலன் அவர்களின் அன்பு மகள் திருமதி கார்த்திகேசு திருமகள் அவர்கள் 13-05-2005 (வெள்ளிக்கிழமை) அன்று காலமாகிவிட்டார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், பல்கலைக்கழக நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2 ஆம் வருடம்
திட்டமிடல் பிரிவு மாணவர்கள்
கலைப்பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

(இ)

INFORMATION TECHNOLOGY PARK,
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Agricultural Marketing Development, Co operative Development, Hindu Affairs and Assisting Education and Vocational Training.

MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, SriLanka.
Office : 021 222 3641
Fax No : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் டிப்ளோமா கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்.

Diploma Courses
Dip.in MS-Office
Dip.in Desktop Publishing

On-Line Classes
Dip.in PC Application & Office Management
(அரச உத்தியோகத்தருக்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டது)

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 20-05-05
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 21-05-05

சகல கற்கை நெறிகளுக்குமான பதிவுக் கட்டணம்: 250/-

Centre for Information Technology
(4126) -Executive Officer

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.05.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.